அந்தரங்கமானது

# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## க.பொ.த (உயர் தர)ப் பரீட்சை - 2021 (2022)

## புள்ளி வழங்கும் திட்டம்

## 51 - சித்திரக்கலை



இந்த விடைத்தாள் பரீட்சகர்களின் உபயோகத்துக்காகத் தயாரிக்கப்பட்டது. பிரதம பரீட்சகர்களின் கலந்துரையாடல் நடைபெறும் சந்தர்ப்பத்தில் பரிமாறிக்கொள்ளும் கருத்துக்களுக்கிணங்க, இதில் உள்ள சில விடயங்கள் மாறலாம்.

இறுதித் திருத்தங்கள் உள்ளடக்கப்படவுள்ளன

முழுப்பதிப்புரிமையுடையது

Department of Examinations - Sri Lanka

# க. பொ. த (உயர் தரப்)ப் பரீட்சை - 2021 (2022)

# புள்ளி வழங்கும் திட்டம்

# I, II, III

## 51 - சித்திரக்கலை

**சித்திரக்கலை** I

இவ்விடைத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டது. பகுதி I - 40 பல்தேர்வு வினாக்களைக் கொண்டுள்ளதுடன் பகுதி II - 07 வினாக்களை கொண்டுள்ளது. பல்தேர்வு வினா கட்டாய வினாவாகவும் பகுதி II அ, ஆ, இ என மூன்று உப பகுதிகளைக் கொண்டது. அ பகுதியிலிருந்து எவையெனும் 2 வினாக்களையும் ஆ, இ பகுதியிலிருந்து 1 வினா வீதம் தெரிவு செய்து 4 வினாக்களிற்கு விடை தருக. பல்வேறு தேர்வு வினாக்களுக்கு 40 புள்ளிகளும் ஏனைய வினாக்களுக்கு 15 வீதம் 60 புள்ளிகள் வீதம் 100 புள்ளிகள் வழங்கப்படும்.

**சித்திரக்கலை** II

இவ்வினாத்தாளில் ஒரே ஒரு செய்முறை வினா மட்டுமே உள்ளது. சுதந்திரமான இரேகை வரைதலின் மூலம் அசையாப் பொருட்கூட்டத்தைப் பார்த்து வரைதலும் வர்ணம் தீட்டுதலும். இதற்கு 100 புள்ளிகள் வழங்கப்படும்.

**சித்திரக்கலை** III

இவ்வினாத்தாள் அ,ஆ,இ என மூன்று செய்முறை வினாக்களை கொண்டது.

அ. சித்திர ஒழுங்கிணைப்பு

ஆ. அலங்கார ஆக்கம்

இ. கிரபிக் சித்திர நிர்மானிப்பு

குறிப்பிட்ட மூன்று பகுதிகளில் இருந்து ஒரு பகுதியை தெரிந்து ஒரு வினாவை தெரிவு செய்து விடை அளித்தல் வேண்டும். இவ்வினாப்பத்திரத்திற்கு 100 புள்ளிகள் வழங்கப்படும். ஒரு வினாப்பத்திரத்திற்கு 100 புள்ளிகள் வீதம் மூன்று வினா பத்திரத்திற்கு 300 புள்ளிகள். இதை மூன்றால் வகுப்பதன் (300/3 = 100) மூலம் இறுதிப் புள்ளியை பெறுதல் வேண்டும்.

முதலாம் வினாப் பத்திரத்திற்கு புள்ளிகள் வழங்கும் போது பகுதி இரண்டிற்கும் வேறுவேறாக புள்ளி வழங்குவதற்கு கவனம் எடுத்தல் வேண்டும். முதலாம் பகுதியான பல்தேர்வு வினா பத்திரத்திற்கு விடை அவ்வினாப்பத்திரத்திலேயே அளிக்கப்பட்டிருக்கும். அப்பத்திரத்திலேயே சரி பிழை இட்டு பெறப்படும் உரிய புள்ளிகளை விடைத்தாளின் மேல் வலப்பக்கத்தில் காணப்படும் கூட்டினுள் பதியவும். மிகுதி வினாக்கள் மூன்றிற்கும் வேறு வேறாக மதிப்பீடு செய்து ஒவ்வொன்றிற்கும் கிடைக்கப் பெறும் புள்ளிகளை பிழை இன்றி அவ்விடையின் இறுதியில் எழுதி அவற்றை கூட்டி அவ்வினாக்களின் கூட்டுத்தொகையை பல்தேர்வு வினாப்பத்திரத்தின் வலப்பக்க மேல்மூலையில் காணப்படும் உரிய கூட்டினுள் இட்டு கூட்டிக் கொள்ளவும்.

ஒவ்வொரு விடைகளுக்கும் கிடைக்கும் புள்ளியை வேறு வேறாக வினா இலக்கத்திற்கு எதிரே முன்பக்கத்திற்கு கொண்டு வந்து இட்டு முழுக் கூட்டுத்தொகையை பிழை இன்றி முதலாவது பத்திரத்திற்கு உரிய கூட்டினுள் இடவும். அவ்வாறே II,III பத்திரங்களுக்கு நியதிகளின் அடிப்படையில் வழங்கப்பட்ட புள்ளிகளை முதல் பக்கத்தில் உள்ள உரிய கூட்டினுள் பதிக. வினாப்பத்திரம் மூன்றிற்கும் 300 புள்ளிகள் பெறப்படும். அதனை மூன்றால் வகுத்து இறுதிப்புள்ளியை தீர்மானித்தல் வேண்டும். இலக்கங்களை எழுதும்போது விளக்கமாகவும் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும்.

Department of Examinations - Sri Lanka

புள்ளியிடப்பட்ட ஒவ்வொரு விடைத்தாளும் இன்னுமொரு பரீட்சகரினால் மீள்பரிசீலனை செய்யப்பட வேண்டும். ஒவ்வொரு பரீட்சகரும் தத்தம் குறியீட்டு எண்களை தாம் புள்ளி இட்ட விடைத்தாளிலும் குறித்த இடங்களில் கட்டாயமாக இடவேண்டும்.

புள்ளிப்பட்டியல்களைப் பதியும் போது புள்ளிகளைப் பதியும் பரீட்சகர் தாமே விடைத்தாளை பார்த்து புள்ளிகளைப் பதியவேண்டும். ஒருவர் வாசிக்க ஒருவர் பதியவே கூடாது. பிழைகள் ஏற்படாமல் பொறுமையாக பதிதல் வேண்டும். ஏதேனும் பிழைகள் ஏற்படுமாயின் அதைத் தனிக்கோட்டினால் வெட்டி அருகில் எழுதி கையொப்பம் இட வேண்டும். அழித்தல், சுரண்டுதல், அழிக்கும் மை, பாவித்தல் என்பன தவிர்க்கப்படல் வேண்டும்.

சில வேளைகளில் மேலதிகமான வினாக்களுக்கும் விடை அளித்திருக்கக் கூடும். அவ்வாறான சந்தர்ப்பத்தில் விடைத்தாளில் எழுதப்பட்டிருக்கும் சகல விடைகளையும் புள்ளியிட்டு முதற்பக்கத்தில் அப்புள்ளிகளைப் பதிந்து அப்புள்ளிகளில் மிகக் குறைந்த புள்ளியை மட்டும் மேலதிகம் எனக் குறிப்பிட்டு வெட்டி மிகுதிப் புள்ளிகளைக் கூட்டி மொத்தப் புள்ளி காணப்பட வேண்டும்.

விடைத்தாள்களைப் புள்ளியிட சிவப்பு மைப் பேனாவைப் பயன்படுத்துக.

Department of Examinations - Sri Lanka

**பத்திரம் I**

நோக்கம்:- 1. இலங்கை, இந்தியா, ஐரோப்பிய கலை நிர்மானங்களையும் அதன் கலாச்சார பின்னணியையும் பற்றி மாணவர்கள் பெற்றுள்ள தேர்ச்சியை அளவிடல்.

2. பிரசித்தி பெற்ற பல்வேறு கலைஞர்களையும் அவர்களது கலை ஆக்கங்களையும் அறிந்து அவற்றின் பின்னணி, ஊடகப்பயன்பாடு கருப்பொருள் நுட்பமுறைகளையும் உணர்வு வெளிப்பாட்டையும், நயத்தல் திறனையும் அளவிடல்.

3. கற்ற விடயங்களை சரியாகவும், தர்க்கரீதியாகவும் முன்வைக்கும் திறனை அளவிடல்.

**பத்திரம் II**

அசையாப் பொருட்கூட்டம் வரைதலும் வர்ணம் தீட்டுதலும்

நோக்கம்:- 1. இயற்கைச் செயற்கைப் பொருட்களின் இயல்பையும், வடிவமைப்பையும் விளங்கிக் கொள்ளும் திறனையும் கோட்பாடுகளைப் பயன்படுத்தல் தொடர்பான திறன்களையும் நுட்பமுறைப் பயன்பாட்டையும் அளவிடுதல்.

2. இரேகையைப் பயன்படுத்தி பொருட்களின் இயல்புகள் வெளிப்படும் வகையில் சித்தரிக்கும் திறனையும் அளவிடுதல்.

3. வர்ணத்தைப் பயன்படுத்திக் கொள்ளும் நுட்பமுறையையும் பொருட்களின் இயல்புகள் வெளிப்படும் முறையில் வர்ணத்தை பயன்படுத்தும் திறனையும் அளவிடுதல்.

IIம் பத்திரத்தின் பொருட்டு பரீட்சார்த்தி ஒரு வர்ணச் சித்திரத்தை மாத்திரமே வரைந்திருப்பர். இதில் பொருட்கூட்டத்தை யதார்த்தத் தன்மையில் வரைந்து வர்ணம் தீட்டி பூரணப்படுத்தப்பட்டிருப்பதையே எதிர்பார்க்கப்படுகிறது.

இதன்பொருட்டு புள்ளிகளை வழங்கும் பொழுது உரிய நியதிகளின் அடிப்படையில் புள்ளிகளைத் தீர்மானிக்க வேண்டும்.

ஒவ்வொரு நியதிகளின் கீழ் பரீட்சார்த்தி எவ்வளவு தூரத்தை அண்மித்துள்ளார் என்பதை பிழையின்றி தீர்மானித்து புள்ளி வழங்குதல் வேண்டும். இங்கு தமது தனிப்பட்ட இரசனைகளுக்கு இடமளிக்காது மதிப்பீடு தொடர்பாக வழங்கப்பட்டுள்ள நியதிகளின் அடிப்படையில் பரீட்சார்த்தி வெளிப்படுத்தியுள்ள திறன்களை விளங்கிக் கொண்டு அதன் அடிப்படையில் மதீப்பீட்டை செய்தல் வேண்டும்.

**புள்ளி வழங்கும் நியதிகள்**

1. பொருட் கூட்டத்தை கடதாசிப் பரப்பில் கருத்துடன் ஒழுங்கமைத்துள்ள திறன் **(20 புள்ளிகள்)**
2. பொருட்களின் பிரமாணப் பண்பையும் அமைப்பையும் இயல்பையும் வெளிப்படுத்தும் திறன். **(20 புள்ளிகள்)**
3. கோட்பாடுகளை பயன்படுத்திக் கொள்ளும் திறன்.
   (தூரதரிசனம், முப்பரிமாணம், கண்மட்டம்) **(20 புள்ளிகள்)**
4. வர்ணப் பயன்பாடும், இயல்புகளையும் வெளிப்படுத்திக் காட்டும் திறன். **(20 புள்ளிகள்)**
5. சித்திரத்தின் பூரணப்பாடு **(20 புள்ளிகள்)**

**II ம் பத்திரத்திற்கு கிடைக்கும் முழுப்புள்ளி - 100 புள்ளிகள்**

Department of Examinations - Sri Lanka

**பத்திரம் III**

"அ" கருத்து வெளிப்பாட்டு சித்திரம்

நோக்கம்:-

இயற்கையில் காணக் கிடைக்கின்ற இயற்கையானதும் செயற்கையானதுமான சூழலையும் பொருட்களின் தன்மையினையும் அவற்றிடையே நிகழ்கின்ற நிகழ்ச்சிகள் செயற்பாடுகள் தொடர்பாக பெற்றுள்ள அனுபவங்களை ஆக்கச் சிறப்புடன் வெளிப்படுத்தும் திறனையும் இரசனை வளர்ச்சியும் மதிப்பிடுதல்.

பரீட்சார்த்திகள் தெரிவு செய்துள்ள தலைப்பை சித்திரிக்கும் பொழுது பல்வேறு மட்டங்களில் திறன்களை வெளிப்படுத்தி இருப்பதை காணலாம்.

இரேகையை கையாண்டு வடிவமைப்புக்களை வெளிப்படுத்தும் பொழுது குறைந்த கூடிய மட்டத்தில் வெளிப்படுத்தும் சந்தர்ப்பத்தைப் போன்று மனித வடிவங்களை கையாளும் போது அது போன்ற வேறுபாட்டை காணக்கூடிய சந்தர்ப்பங்கள் அதிகம்.

வர்ணத்தை பயன்படுத்தும் பொழுது பல்வேறு நுட்பமுறைகளை பயன்படுத்தி உச்ச மட்ட திறன் வெளிக்காட்டுபவர்களிடையே செயன்முறை திறன் வளர்ச்சி பெறாத பரீட்சார்த்திகளும் வெளிப்படுத்திருக்கும் செயன்முறைத் திறன்களின் மட்டத்தை இனங்கண்டு அதன் பிரகாரம் நியதிகளை அடிப்படையாகக் கொண்டு புள்ளிகளை வழங்குதல் வேண்டும்.

**புள்ளி வழங்கும் நியதிகள்**

1. தெரிவு செய்த தலைப்பை சித்திரிக்கும் பொழுது அதற்குப் பொருத்தமான நிகழ்வினையும் சூழலையும் வெளிப்படுத்தியிருக்கும் தன்மை. **(20 புள்ளிகள்)**

2. மனிதர் பிராணிகளின் உருவங்களுடன் சகல வடிவமைப்புக்களையும் பரப்பில் ஒழுங்கிணைத்துள்ள தன்மை. **(20 புள்ளிகள்)**

3. கோட்பாட்டுப் பயன்பாடு தொடர்பான விளக்கம். **(20 புள்ளிகள்)**

4. வர்ணப் பயன்பாட்டில் வெளிப்படுத்தியிருக்கும் திறன். **(20 புள்ளிகள்)**

5. பூரணப்பாடு **(20 புள்ளிகள்)**

**( முழுப்புள்ளிகள் 100 புள்ளிகள் )**

Department of Examinations - Sri Lanka

**பத்திரம் III (ஆ)**

அலங்காரமும் அலங்கரிப்பும் ஆக்கமும்

நோக்கம்:–

அன்றாட வாழ்க்கையில் ஏற்படுகின்ற பல்வேறு தேவைகளுக்கும் தொடர்பாடல் செயல்பாட்டிற்கும் ஏற்ற வகையில் ஆக்கச் சிறப்புடன் திட்டமிட்டலும் அலங்கரித்தல் தொடர்பாகவும் பரீட்சார்த்தி பெற்றுள்ள திறன்களை பரீட்சித்தல்.

பத்திரம் III க்கு விடையளிக்கும் பொழுது

பெரும்பாலான பரீட்சார்த்திகள் பகுதியை தெரிவு செய்கின்றனர். அவர்களிடையே அதிகமானோர் கோட்பாட்டு அறிவுடன் புதிய முறையில் அலங்காரத்தை நிர்மானிப்பதுடன் கோட்பாடு அறிவு இல்லாது அலங்காரத்தை நிர்மானிப்போர் பலர் உள்ளனர். எவ்வாறாயினும் பரீட்சார்த்திகளின் ஆக்கங்களில் வெளிப்படுகின்ற அவர்களுடைய அனுபவத் திறன்கள் பலவாகும். நியதிகளின் மூலம் அவர்கள் வெளிக்காட்டியுள்ள திறன்களின் அளவை விளங்கிக் கொண்டு புள்ளிகளை வழங்குதல் வேண்டும்.

**புள்ளி வழங்கும் நியதிகள்**

1. தலைப்பிற்கு பொருத்தமாக நிர்மானத்தை ஏற்ற வகையில் புதிய முறையில் திட்டமிட்டு கொள்ளும் முறை. **(20 புள்ளிகள்)**
2. நுகர்வோர் தேவைக்கு பொருத்தமாகவும் கைத்தொழிலுக்கு ஏற்றதாகவும் அமைத்தல். **(20 புள்ளிகள்)**
3. இரேகை வடிவங்களை கருத்துடன் பயன்படுத்தி கொள்ளும் திறன். **(20 புள்ளிகள்)**
4. பொருத்தமான வர்ணத்தை தெரிதல் பயன்படுத்திக் கொள்ளும் திறன் **(20 புள்ளிகள்)**
5. அலங்கரிப்பு அழகும் ஆக்கத்திறன் பூரணப்பாடும் **(20 புள்ளிகள்)**

**முழுப்புள்ளிகள் 100 புள்ளிகள்**

**பத்திரம் III (இ) கிரபிக் சித்திர நிர்மானிப்பு**

நோக்கம்:–

வியாபார தேவைகளுக்கும் தொடர்பாடல் செயல்பாட்டிற்கும் ஏற்ற வகையில் ஆக்கச் சிறப்புடன் திட்டமிடலும், அலங்கரித்தல் தொடர்பாகவும் பரிசார்த்தி பெற்றுள்ள திறன்களை பரீட்சித்தல்.

**புள்ளி வழங்கும் நியதிகள்**

1. தலைப்பிற்கு பொருத்தமான நிருமானச் செயலுக்கும் உரிய வகையில் புதிய முறையில் திட்டமிட்டுக் கொள்ளும் திறன். **(20 புள்ளிகள்)**
2. வியாபாரத்திற்கும் தொடர்பாடல் தேவைகளுக்கும் ஏற்ற வகையிலும் கைத்தொழிலுக்கு பொருத்தமாகவும் அமைதல். **(20 புள்ளிகள்)**
3. இரேகை வடிவங்களை கருத்துடன் பயன்படுத்தி கொள்ளும் திறன். **(20 புள்ளிகள்)**
4. பொருத்தமான வர்ணத்தை தெரிதலும் பயன்படுத்தி கொள்ளும் திறன். **(20 புள்ளிகள்)**
5. அலங்கரிப்பு, அழகு, நிருமானத்திறனும் பூரணப்பாடும் **(20 புள்ளிகள்)**

**( மொத்தப் புள்ளிகள் 100 புள்ளிகள் )**

Department of Examinations - Sri Lanka

## விடைத்தாள்களுக்குப் புள்ளியிடல் - பொது நுட்ப முறைகள்

விடைத்தாள்களுக்குப் புள்ளியிடும் போதும், புள்ளிப்பட்டியலில் புள்ளிகளைப் பதியும் போதும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட முறையைக் கடைப்பிடித்தல் கட்டாயமானதாகும். அதன்பொருட்டு பின்வரும் முறையில் செயற்படவும்.

1. விடைத்தாள்களுக்குப் புள்ளியிடுவதற்கு சிவப்பு நிற குமிழ்முனை பேனாவை பயன்படுத்தவும்.
2. சகல விடைத்தாள்களினதும் முதற்பக்கத்தில் உதவிப் பரீட்சகரின் குறியீட்டெண்ணைக் குறிப்பிடவும். இலக்கங்கள் எழுதும்போது **தெளிவான இலக்கத்தில்** எழுதவும்.
3. இலக்கங்களை எழுதும்போது பிழைகள் ஏற்பட்டால் அவற்றைத் தனிக்கோட்டினால் கீறிவிட்டு, மீண்டும் பக்கத்தில் சரியாக எழுதி, சிற்றொப்பத்தை இடவும்.
4. ஒவ்வொரு வினாவினதும் உபபகுதிகளின் விடைகளுக்காக பெற்றுக்கொண்ட புள்ளியை பதியும் போது அந்த வினாப்பகுதிகளின் இறுதியில் △ இன் உள் பதியவும். இறுதிப் புள்ளியை வினா இலக்கத்துடன் □ இன் உள் பின்னமாகப் பதியவும். புள்ளிகளைப் பதிவதற்கு பரீட்சகர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிரலை உபயோகிக்கவும்.

**உதாரணம் - வினா இல 03**

(i) ............................................................................ ✓ △ 4/5
............................................................................
............................................................................

(ii) ............................................................................ ✓ △ 3/5
............................................................................
............................................................................

(iii) ............................................................................ ✓ △ 3/5
............................................................................
............................................................................

(03) (i) $\frac{4}{5}$ + (ii) $\frac{3}{5}$ + (iii) $\frac{3}{5}$ = $\boxed{\frac{10}{15}}$

**பல்தேர்வு விடைத்தாள் (துளைத்தாள்)**

1. க.பொ.த.(உ. தர) மற்றும் தகவல் தொழிநுட்பப் பரீட்சைக்கான துளைத்தாள் திணைக்களத்தால் வழங்கப்படும். சரியாக துளையிடபட்டு அத்தாட்சிப்படுத்திய துளைத்தாள் தங்களுக்கு கிடைக்கப்பெறும். அத்தாட்சிப்படுத்திய துளைத்தாளைப் பயன்படுத்துவது பரீட்சகரின் கடமையாகும்.

2. அதன் பின்னர் விடைத்தாளை நன்கு பரிசீலித்துப் பார்க்கவும். ஏதாவது வினாவுக்கு, ஒரு விடைக்கும் அதிகமாக குறியிட்டிருந்தாலோ, ஒரு விடைக்காவது குறியிடப்படாமலிருந்தாலோ தெரிவுகளை வெட்டிவிடக்கூடியதாக கோடொன்றைக் கீறவும். சில வேளைகளில் பரீட்சார்த்தி முன்னர் குறிப்பிட்ட விடையை அழித்துவிட்டு வேறு விடைக்குக் குறியிட்டிருக்க முடியும். அவ்வாறு அழித்துள்ள போது நன்கு அழிக்காது விட்டிருந்தால், அவ்வாறு அழிக்கப்பட்ட தெரிவின் மீதும் கோடிடவும்.

3. துளைத்தாளை விடைத்தாளின் மீது சரியாக வைக்கவும். சரியான விடையை ✓ அடையாளத்தாலும் பிழையான விடையை அடையாளத்தாலும் இறுதி நிரலில் அடையாளமிடவும். சரியான விடைகளின் எண்ணிக்கையை அவ்வவ் தெரிவுகளின் இறுதி நிரையின் கீழ் அத்துடன் அவற்றை கூட்டி சரியான புள்ளியை உரிய கட்டத்தில் எழுதவும்.

Department of Examinations - Sri Lanka

**கட்டமைப்பு கட்டுரை விடைத்தாள்கள்**

1. பரீட்சார்த்திகளால் விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்டுள்ள இடங்களையும், பக்கங்களையும் குறுக்குக் கோடிட்டு வெட்டிவிடவும். பிழையான பொருத்தமற்ற விடைகளுக்குக் கீழ் கோடிடவும். புள்ளி வழங்கக்கூடிய இடங்களில் ✓ அடையாளமிட்டு அதனைக் காட்டவும்.
2. புள்ளிகளை ஓவலண்ட் கடதாசியின் இடது பக்கத்தில் குறிக்கவும்.
3. சகல வினாக்களுக்கும் கொடுத்த முழுப் புள்ளியை விடைத்தாளின் முன் பக்கத்திலுள்ள பொருத்தமான பெட்டியினுள் வினா இலக்கத்திற்கு நேராக 2 இலக்கங்களில் பதியவும். வினாத்தாளில் உள்ள அறிவுறுத்தலின் படி வினாக்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும். எல்லா வினாக்களினதும் புள்ளிகளும் முதல் பக்கத்தில் பதியப்பட்ட பின் விடைத்தாளில் மேலதிகமாக எழுதப்பட்டிருக்கும் விடைகளின் புள்ளிகளில் குறைவான புள்ளிகளை வெட்டி விடவும்.
4. மொத்த புள்ளிகளை கவனமாக கூட்டி முன் பக்கத்தில் உரிய கூட்டில் பதியவும். விடைத்தாளில் வழங்கப்பட்டுள்ள விடைகளுக்கான புள்ளியை மீண்டும் பரிசீலித்த பின் முன்னால் பதியவும். ஒவ்வொரு வினாக்களுக்கும் வழங்கப்படும் புள்ளிகளை உரிய விதத்தில் எழுதுவும்.

## புள்ளிப்பட்டியல் தயாரித்தல்

இம்முறை சகல பாடங்களுக்குமான இறுதிப்புள்ளி குழுவினுள் கணிப்பிடப்படமாட்டாது. இது தவிர ஒவ்வொரு வினாப் பத்திரத்துக்குமான இறுதிப்புள்ளி தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதியப்பட வேண்டும். பத்திரம் I ற்கான பல்தேர்வு வினாப்பத்திரம் மட்டும் இருப்பின் புள்ளிகள் இலக்கத்திலும் எழுத்திலும் பதியப்பட வேண்டும். 51 சித்திரப் பாடத்திற்குரிய I, II, மற்றும் III ஆம் வினாப்பத்திரங்களுக்குரிய புள்ளிகளை தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதிந்து எழுத்திலும் எழுதுதல் வேண்டும்.

ooo

Department of Examinations - Sri Lanka

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka Department of Examinations, Sri Lanka

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2021(2022)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2021(2022)
General Certificate of Education (Adv. Level) Examination, 2021(2022)

චිත්‍ර කලාව I
சித்திரக்கலை I
Art I

51 T I

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

**வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

சுட்டெண் : ......................................

**அறிவுறுத்தல்கள்:**

※ இவ்வினாத்தாள் **இரண்டு** பகுதிகளைக் கொண்டுள்ளது.

**பகுதி I**

- எல்லா **வினாக்களுக்கும் இவ்வினாத்தாளிலேயே** விடையளிக்குக.
- ஒவ்வொரு வினாவுக்குமுரிய சரியான விடையைத் தெரிவுசெய்து அதன் **இலக்கத்தை** எதிரே உள்ள **புள்ளிக்கோட்டின்மீது** எழுதுக.

**பகுதி II**

- மூன்று உப பகுதிகளைக் கொண்டது.
- **'அ'** பகுதியிலிருந்து எவையேனும் **இரண்டு** வினாக்களையும் **'ஆ', 'இ'** ஆகிய ஒவ்வொரு பகுதியிலிருந்தும் **ஒரு** வினா வீதமும் தெரிவுசெய்து **நான்கு** வினாக்களுக்கு விடை எழுதுக.

※ பகுதி **I**, பகுதி **I** ஆகியவற்றின் விடைத்தாள்களை ஒன்றாக இணைத்துக் கையளிக்குக.

**பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும்**

| வினாத்தாள் I | |
|---|---|
| பகுதி | புள்ளி |
| I | |
| II | |
| மொத்தம் | |
| 1 ஆம் பரீட்சகர் | 2 ஆம் பரீட்சகர் |
| | |

## பகுதி I

● **1** தொடக்கம் **5** வரையான ஒவ்வொரு வினாவுக்கும் மிகச் சரியான விடையைத் தெரிவுசெய்க.

**1.** 'சங்கநிதி', 'பதுமநிதி' ஆகிய உருவங்களைக் கொண்ட காவற்கற் சோடியைக் காணக்கிடைப்பது,
(1) தூபாராமவில் ஆகும்.
(2) லங்காராமயவில் ஆகும்.
(3) அபயகிரிய தூபியில் ஆகும்.
(4) மெதிரிகிரிய வட்டதாகேயில் ஆகும்.
(5) லங்காதிலக சிலைமனையில் ஆகும். (.........)

**2.** சிந்துவெளி நாகரிகத்தில் கிடைக்கப்பெற்ற கலைப் படைப்புகளில் இயற்கையுடன் மிக நெருங்கிய உரு
(1) சிவ பசுபதி (2) முண்டப் படிமை
(3) நடனமாது உருவம் (4) யோகி உருவம்
(5) தாய் தேவதை (.........)


**3.** தம்புள்ளை குகைக் கோயில்,
(1) கண்டிக்கால சுவரோவியங்கள் பலவற்றைக் கொண்ட இடமாகும்.
(2) கடோல்கல்ல ஓவியப் பரம்பரையினரால் வரையப்பட்ட ஓவியங்களைக் கொண்ட இடமாகும்.
(3) அனுராதபுர காலம் தொடக்கம் கண்டிக் காலம் வரையில் ஓவியங்களால் அலங்கரிக்கப்பட்டதாகும்.
(4) நீலகம ஓவியப் பரம்பரையினரால் வரையப்பட்ட சுவரோவியங்களைக் காணக்கிடைக்கும் ஓர் இடமாகும்.
(5) பல ஜாதகக் கதைகள் ஓவியமாக்கப்பட்டுள்ள ஓர் இடமாகும். (.........)


Department of Examinations - Sri Lanka

**4.** எகிப்தின் புதிய இராசதானிக் காலத்தில்,
(1) பிரமிட்டுக்களுக்குப் பதிலாக தேவாலய நிர்மாணிப்பில் ஆர்வம் காட்டப்பட்டது.
(2) அதிகளவான பிரமிட்டுக்கள் நைல் நதிக் கரையில் நிர்மாணிக்கப்பட்டன.
(3) பேரளவிலான பல பிரமிட்டுக்கள் நிர்மாணிக்கப்பட்டன.
(4) பாரா அரசர்களின் லௌகீக வாழ்க்கைக்காக மாளிகைகள் அமைக்கப்பட்டன.
(5) பேரளவிலான பிரமிட்டுக்களுக்குப் பதிலாக சிறியளவிலான பிரமிட்டுக்கள் நிர்மாணிக்கப்பட்டன. (.........)

**5.** கிரேக்க தொல்சீர் யுகத்துக்குரிய சிலை
(1) வீனஸ் டி மெலோ
(2) லவக்கூன்
(3) வெற்றித் தேவதை
(4) இறக்கும் கலாத்தியன்
(5) ஹர்மீசும் டயோனீசியசும் (.........)


● 6 தொடக்கம் 10 வரையான ஒவ்வொரு வினாவுக்கும் மிகப் பொருத்தமான விடையை, 1 தொடக்கம் 7 வரையில் இலக்கமிடப்பட்டுள்ள பின்வரும் கட்டடக்கலை நிர்மாணிப்புகளிலிருந்து தெரிவுசெய்க.


1


2


3


4


5


6


7

**6.** இவற்றுள் பௌத்த சமய நிர்மாணிப்புகளாகக் கருதத்தக்கவை
(1) **1, 2, 5** (2) **1, 3, 4** (3) **2, 4, 5** (4) **3, 5,7** (5) **4, 5, 7** (.........)

**7.** இவற்றுள் இந்தியாவில் அமைந்துள்ள நிர்மாணிப்புகளாவன
(1) **1, 4** (2) **4, 5** (3) **4, 6** (4) **4, 7** (5) **6, 7** (.........)

**8.** இவற்றுள் இந்தியக் கலைப்பண்புகள் சிறப்பாக வெளிப்படும் படைப்புக்களாவன
(1) **1, 2, 5, 6** (2) **1, 4, 5, 7** (3) **1, 5, 6, 7** (4) **2, 3, 4, 5** (5) **2,3,5,7**(.........)

**9.** இவற்றுள் சமயச் சார்பற்ற நிர்மாணிப்புக்களாகக் குறிப்பிடத்தக்கன
(1) **2, 3, 6** (2) **3, 4, 5** (3) **3, 4, 6** (4) **3,6,7** (5) **4, 6, 7** (.........)

**10.** இவற்றுள் பொலன்னறுவைக் காலத்திற்குரிய நிர்மாணிப்புகளாவன
(1) **1, 2, 6** (2) **1, 5, 6** (3) **1, 6, 7** (4) **2, 3, 5** (5) **4, 5, 6** (.........)

Department of Examinations - Sri Lanka


● **11** தொடக்கம் **15** வரையான ஒவ்வொரு வினாவுக்கும் **மிகப் பொருத்தமான** விடையை **A, B, C, D, E** எனப் பெயரிடப்பட்டுள்ள பின்வரும் ஓவியங்களிலிருந்து தெரிவுசெய்க.


A


B


C


D


E

**11.** **A** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள 'இந்திராணி' என்ற ஓவியம்,
(1) அமரசேகர முதலியாரின் சாஸ்திராலய யதார்த்தவாத நிர்மாணிப்பாகும்.
(2) ஸ்டான்லி அபேசிங்கவின் நவீனவாதத்திற்குரிய பெண் பிரதிமை ஓவியமாகும்.
(3) ஹறி பீரிஸின் வெளிப்பாட்டுப் பண்புகளைக் கொண்ட பிரதிமை ஓவியமாகும்.
(4) ஜவன் பீரிஸின் நவீனவாதத்திற்குரிய பெண் உருவமாகும்.
(5) ஜே. டீ. ஏ. பெரேராவின் இயற்கைவாதப் படைப்பாகும். (.........)

**12.** **B** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள ராஜாரவிவர்மாவின் சரஸ்வதி என்ற ஓவியத்தின் மூலம்,
(1) ஐரோப்பிய நவீன கலைநுட்பங்களின் ஊடாக இந்திய கருப்பொருளொன்று சித்திரிக்கப்பட்டுள்ளது.
(2) அங்லோ - இந்திய மரபை மீறி இறைபக்தி சித்திரிக்கப்பட்டுள்ளது.
(3) ஐரோப்பிய அதியதார்த்தவாத கலைநுட்பத்துக்கமைய இந்து சமய பக்திக் கதையொன்றில் வரும் பாத்திரமொன்று சித்திரிக்கப்பட்டுள்ளது.
(4) ஐரோப்பிய நவீனவாத கலைப் பண்புகளைக் கொண்டதாக இந்திய புராண கதையொன்று சித்திரிக்கப்பட்டுள்ளது.
(5) ஐரோப்பிய சாஸ்திராலய யதார்த்தவாதக் கலைப் பண்புகளுக்கமைய வரையப்பட்ட இந்து சமய தேவதை உருவமொன்று சித்திரிக்கப்பட்டுள்ளது. (.........)

**13.** **C** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள, எல். டீ. பீ. மஞ்சுஸ்ரீயினால் வரையப்பட்ட ஓவியம்,
(1) நீர்ச்சாய ஊடகத்தினால், பெண் உடலின் நலினத்தை யதார்த்தபூர்வமாகக் காட்டுவதற்கு எடுக்கப்பட்டதொரு முயற்சியாகும்.
(2) கலைப்பாங்கான பண்புகளை அதியுயர் வெளிப்பாட்டுடன் சித்திரிக்கும் விதத்தில் வரையப்பட்டதாகும்.
(3) நவீன ஐரோப்பிய கலைநுட்பங்களினதும் கீழைத்தேய கலைப் பாணிகளினதும் ஒருங்கிணைப்பாகும்.
(4) சாஸ்திராலய யதார்த்தவாத கலைப் பண்புகளை எடுத்துக்காட்டுவதாகும்.
(5) எண்ணெய் வர்ண ஊடகப் பயன்பாட்டினால் புதிய மனப்பதிவுவாத கலைநுட்பங்களுக்கமைய வரையப்பட்டதாகும். (.........)

**14.** **D** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள 'கண்ணாடி முன் பெண்' என்ற ஓவியமானது,
(1) மரபுரீதியான ஓவியப்பாணியொன்று அவ்வாறே பின்பற்றப்பட்டுள்ளமையாகும்.
(2) குறியீட்டுப் பாணியில் முன்வைக்கப்பட்ட கட்புல வெளிப்பாடாகும்.
(3) இயற்பண்பினை கலைத்துவரீதியான வெளிப்பாடாக மாற்றியுள்ளமையாகும்.
(4) பகுதியளவு அரூபவாதத்தைக் கொண்டதாக நிர்மாணிக்கப்பட்ட பெண் உருவமாகும்.
(5) கலைப்பாங்கான விதத்தில் பெண் உருவம் ஓவியமாக்கப்பட்டுள்ளமையாகும். (.........)

**15.** **E** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள மொன்றியனின் ஓவியம்,
(1) நிலைக்குத்து, கிடைக் கோடுகளால் உருவாக்கப்படும் வடிவங்களின் இணைப்பாகும்.
(2) மோதலொன்றைப் போன்று ஒருங்கிணைப்பும் வெளிப்படும் விதத்தில் பல்வேறு வர்ணச்சதுரங்கள் வரையப்பட்டுள்ளமையாகும்.
(3) கோடுகள், வர்ணங்கள், வெளிகளின் பயன்பாட்டின் மூலம் வர்ணங்களின் ஆழம் வெளிப்படுத்தப்பட்டுள்ளமையாகும்.
(4) சதுர வடிவ மாதிரிகளின் மூலம் கட்டியெழுப்பப்பட்ட கருதுகோள்ரீதியான ஒருங்கிணைப்பாகும்.
(5) எளிமையான கோடுகள், சதுர வடிவங்களின் மூலம் கித்தான் (கன்வஸ்) மீது செய்யப்பட்டதோர் ஒருங்கிணைப்பாகும். (.........)

Department of Examinations - Sri Lanka

● **16** தொடக்கம் **20** வரையான ஒவ்வொரு வினாவுக்கும் மிகப் பொருத்தமான விடையை, **F, G, H, I, J** எனப் பெயரிடப்பட்டுள்ள செதுக்கல்களைக் கொண்ட பின்வரும் படங்களிலிருந்து தெரிவுசெய்க.


F


G


H


I


J

**16. F** எழுத்தினால் காட்டப்பட்ட இச்செதுக்கல்,
(1) ஆண் உருவத்தின் மகிழ்வையும் பெண் உருவத்தின் சோகத்தையும் காட்டுவதற்கு எடுக்கப்பட்டதொரு முயற்சியாகும்.
(2) செதுக்கல் நுட்பமுறைகளைப் பயன்படுத்திச் செய்யப்பட்ட தெய்வீகமான வெளிப்பாடாகும்.
(3) அரச பண்புகள் வெளிப்படும் விதத்தில் மேற்கொள்ளப்பட்ட பல்லவர்களின் கலைப் பண்புகளைக் கொண்ட கற்றகடாகும்.
(4) குப்தர்களின் கலைப் பண்புகளைக் கொண்ட உணர்வுபூர்வமானதும் நேர்த்தியானதுமான வெளிப்பாடாகும்.
(5) மனித உருவங்கள் இரண்டை ஒன்றிணைத்துச் செய்யப்பட்ட சிருங்காரமானதொரு வெளிப்பாடாகும். (.........)

**17. G** எழுத்தினால் கட்டப்பட்டுள்ள மரத்தாலான சட்டகச் செதுக்கல்,
(1) எம்பக்க தேவாலயத்திலுள்ள, தாய்ப்பாசத்தை வெளிப்படுத்தும் செதுக்கலாகும்.
(2) பனாவிட்டிய அம்பலத்தில் காணத்தக்க, சாதாரண மனித வாழ்வு சித்திரிக்கப்படும் சந்தர்ப்பமாகும்.
(3) கண்டி மகுல்மடுவயிலுள்ள, அரச குடும்பம் ஒன்று காட்டப்படும் செதுக்கலாகும்.
(4) எம்பக்க தேவாலயத்தில் காணக்கிடைக்கும், கடவுள் கதையொன்றை கருப்பொருளாகக் கொண்டதொரு சந்தர்ப்பமாகும்.
(5) பனாவிட்டிய அம்பலத்திலுள்ள, உன்னத பெண்மணி ஒருவரும் அவரது சேவகி ஒருவரும் காட்டப்பட்டுள்ள செதுக்கலாகும். (.........)

**18. H** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள பாருத் எச்சங்களில் இருந்து கிடைக்கப்பெற்றுள்ள இச்செதுக்கல்,
(1) பல சம்பவங்களை ஒரே சட்டகத்தில் எளிய புடைப்பில் ஒருங்கிணைத்த சந்தர்ப்பமாகும்.
(2) ஜாதகக்கதை ஒன்றை தொனிப்பொருளாகக் கொண்ட அரை புடைப்புச் சட்டகமாகும்.
(3) புத்தரின் வாழ்வுடன் தொடர்புடைய பிரபல்யமானதொரு சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டதாகும்.
(4) கல்வேலியின் அலங்கார அங்கமாகச் செதுக்கப்பட்ட சமகாலச் சம்பவமொன்றாகும்.
(5) தொடர்ச்சியான கதைகூறும் முறையில் நிர்மாணிக்கப்பட்ட எளிய புடைப்பு கற்றகட்டுச் செதுக்கலாகும். (.........)

**19. I** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள செதுக்கல்,
(1) புத்த பகவானின் வாழ்க்கையுடன் தொடர்புடைய புராணக் கதையொன்று சித்திரிக்கப்படுவதாகும்.
(2) சித்தார்த்தன் பூங்காவில் விளையாடுவதற்காகச் செல்லும் சந்தர்ப்பத்தை எடுத்துக்காட்டுவதாகும்.
(3) அமராவதி பிரதேசத்திலிருந்து கிடைக்கப்பெற்ற அரச ஊர்வலமொன்று (பெரஹரா) காட்டப்பட்டுள்ளமையாகும்.
(4) சித்தார்த்தர் 'இல்லறத்தைத் துறத்தலைச் (அபினிஸ்க்ரமணய) சித்திரிப்பதாகும்.
(5) போர்க்களத்துக்குச் செல்லும் குதிரை வீரன் ஒருவனைச் சித்திரிப்பதாகும். (.........)

**20. J** எழுத்தினால் காட்டப்பட்டுள்ளது,
(1) மென்குரே அரசன் எதிரிகளுடன் யுத்தம் செய்கின்றமையைக் காட்டுகின்ற செதுக்கலாகும்.
(2) பாரா அரசர்களின் போர்க் காட்சிகளை உள்ளடக்கிய பளிங்கிலான கற்றகடாகும்.
(3) ஹோரஸ் கடவுளுடன் செய்யப்படுகின்ற யுத்தக் காட்சிகளை உள்ளடக்கிய செதுக்கலாகும்.
(4) காப்ரோ அரசனின் வாழ்க்கைத் தகவல்களை உள்ளடக்கிய செதுக்கல் கற்றகடாகும்.
(5) நாமர் அரசனின் போர் வெற்றிகள் குறியீட்டுப் பாணியில் காட்டப்படுகின்ற செதுக்கல் கற்றகடாகும். (.........)

Department of Examinations - Sri Lanka

- **21** தொடக்கம் **25** வரையான ஒவ்வொரு வினாவுக்கும் மிகப் பொருத்தமான விடையை, **K, L, M, N, O** எனப் பெயரிடப்பட்டுள்ள பின்வரும் கலைப்படைப்புக்களிலிருந்து தெரிவுசெய்க.


K


L


M


N


O

**21. K** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள, கல்விகாரையின் சமாதி புத்தர்சிலை,
(1) பல்லவர்களின் செல்வாக்குடன் நிர்மாணிக்கப்பட்டதாகும்.
(2) மகாயான எண்ணக்கருவுக்கமைய உருவாக்கப்பட்டதாகும்.
(3) அமராவதி பாணியில் நிர்மாணிக்கப்பட்டதாகும்.
(4) மதுரா கலை மரபுக்கமைய நிர்மாணிக்கப்பட்டதாகும்.
(5) குப்த செல்வாக்குடன் நிர்மாணிக்கப்பட்டதாகும். (.........)

**22. L** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள, அர்த்தநாரீஸ்வரர் சிலை,
(1) பொலன்னறுவைக் காலத்தில் கிடைக்கப்பெற்ற உலோக வார்ப்புச் சிலையாகும்.
(2) இடது அரைப்பாகம் பெண் தன்மையினதாக நிர்மாணிக்கப்பட்டதொரு சிலையாகும்.
(3) பெண் உருவின் வனப்பை வெளிப்படுத்தும் சிலையாகும்.
(4) பெண், ஆணைவிட பலம் பொருந்தியவள் என்பதைச் சித்திரிக்கும் படைப்பாகும்.
(5) அபயகிரி விகாரை வளாகத்தில் கிடைக்கப்பெற்ற வெண்கலச் சிலையாகும். (.........)

**23. M** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள, காந்தாரத்தில் கிடைக்கப்பெற்ற பிரேகம் சிலை,
(1) ஓரளவு அதிசயிக்கத்தக்கதாகச் சித்திரிக்கப்படும் சிலையாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.
(2) சிறந்த பூரணத்துவத்தையும் சுருக்கங்களைக் கொண்ட காவியுடையையும் கொண்டதாகும்.
(3) அபய முத்திரை சித்திரிக்கப்படும் புத்தர் சிலையாகக் கருதப்படுகிறது.
(4) இந்திய கலைப் பண்புகளை வெளிப்படுத்துவதாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.
(5) சரியான அளவிடைக்கமைய நிர்மாணிக்கப்பட்ட சிலையாகும். (.........)

**24. N** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள சிலை,
(1) சோழர்களின் மரபுக்குரிய கோயில் ஒன்றின் வெளிச்சுவரிலுள்ள சிவ பிச்சாதனர் உருவமாகும்.
(2) ஆல மரத்தடியில் ராஜ கம்பீரத்துடன் அமர்ந்திருக்கும் கல்யாண சுந்தரர் சிலையாகும்.
(3) ராஜ ராஜேஸ்வரர் கோயிலின் இடது பக்க மனை ஒன்றில் செதுக்கப்பட்டுள்ள சிவபெருமானின் உருவமாகும்.
(4) எல்லாம் வல்ல குருவின் தன்மையில் வீற்றிருக்கும் சிவதட்சிணாமூர்த்தி உருவமாகும்.
(5) கலைப்பாங்குடன் செதுக்கப்பட்டுள்ள, விஷ்ணுவின் உருவத்தைக் கொண்ட கோபுரச் செதுக்கல் ஆகும். (.........)

**25. O** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள 'சிந்திக்கும் மனிதன்' என்ற சிலையின் மூலம் ரொடின் முயற்சி செய்துள்ளமை,
(1) மனித உடலின் உறுதியான தன்மையை மென்மையாக சிலையாக்குவதற்காகும்.
(2) உணர்வுகளை வெளிப்படுத்துவதற்காக முழுமையான மனித உருவின் தேவையை எடுத்துக்காட்டுவதற்காகும்.
(3) நிறைவற்ற பூரணத்துவம் கூட கலைத்துவக் கோட்பாடாகும் என்பதனை உறுதிப்படுத்துவதற்காகும்.
(4) விரக்தியுற்றமை காரணமாக ஏற்பட்ட மன உழைச்சலை வலுவான உடற்பண்புகளைக் கொண்டதாகக் காட்டுவதற்காகும்.
(5) ஆழமான உணர்வு வெளிப்பாட்டுக்காக நிர்வாணமான மனித உடலைப் பயன்படுத்தலாம் என்பதைக் காட்டுவதற்காகும். (.........)

Department of Examinations - Sri Lanka

- **26** தொடக்கம் **30** வரையான ஒவ்வொரு வினாவுக்கும் **மிகப் பொருத்தமான விடையைத்** தெரிவுசெய்க.

**26.** தற்காலத்தில் 'கட்புலக் கலை' என்பதனால் கருதப்படுவது,
(1) கண்ணை அடிப்படையாகக் கொண்டு பார்க்கச் செய்கின்ற நிர்மாணிப்புகளாகும்.
(2) பொருள்களை ஊடகமாகக் கொண்டு கட்டியெழுப்பி செய்யப்படுகின்ற நிர்மாணிப்புகளாகும்.
(3) வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் இருந்து நிலவி வந்த ஓவியக் கலையாகும்.
(4) வர்ண ஊடகத்தினால் செய்யப்படுகின்ற, கண்கவர் வெளிப்பாடாகும்.
(5) ஓவியங்கள், சிலைகள், கட்டடக்கலை போன்ற கலைக் கூறுகளின் சேர்க்கையாகும். (.........)

**27.** வர்த்தகரீதியான கிறபிக் நிர்மாணிப்புகளின் முக்கிய குறிக்கோளாக அமைவது,
(1) உற்பத்திப்பொருட்களை விற்பனை செய்யும்போது அதிக நன்மைகளை வழங்குதலாகும்.
(2) அச்சிடற் பணிகளை மிக வினைத்திறனாகவும் முறையாகவும் செய்துகொள்ள முடியுமானதாக இருத்தலாகும்.
(3) உற்பத்திப் பெயர் சிறப்பாக வெளிப்படுத்தப்படும் விதத்தில் தொடர்பாடல் செய்தலாகும்.
(4) உற்பத்தி, சேவைகள் தொடர்பாக நேரடியாகவும் மறைமுகமாகவும் தொடர்பாடல் செய்வதற்காகும்.
(5) உற்பத்திக்குத் தேவையான சுட்டுத்துண்டு (Label), சுற்றுறை அகியவற்றைத் தயாரித்துக் கொள்வதற்காகும். (.........)

**28.** மொகலாய ஓவியக்கலை,
(1) ஜஹாங்கீரினால் இந்தியாவில் அறிமுகப்படுத்தப்பட்ட சிறியளவிலான ஓவிய மரபாகும்.
(2) அவுரங்கசீப்பினால் இந்தியா முழுவதும் பரப்பப்பட்டதாகும்.
(3) பர்சிய செல்வாக்கின் மூலம் இஸ்லாமிய ஆட்சியாளர்களால் பிரபல்யப்படுத்தப்பட்டதாகும்.
(4) இந்திய இலக்கிய சம்பவங்களைச் சித்திரிப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட ஓவிய மரபாகும்.
(5) இஸ்லாமியர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட சமய சார்பான ஓவிய மரபாகும். (.........)

**29.** கனவடிவவாதக் கலைஞர்களின் நோக்கமாக அமைந்தது,
(1) பொருள் ஒன்றைப் பார்க்கும் கோணத்தை மாற்றியமைத்தலாகும்.
(2) கட்புல நோக்கங்களை அதேவிதமாகப் பின்பற்றுதலாகும்.
(3) யதார்த்தவாதமற்ற கலைப்பாங்கான விதிமுறைகளைப் பின்பற்றுதலாகும்.
(4) பொருட்களை, கேத்திர கணித வடிவங்களைப் பயன்படுத்தி பகுத்தாய்தலாகும்.
(5) இயற்கையிலுள்ள பொருட்களை அசையா தன்மையினதாகக் காட்டுதலாகும். (.........)

**30.** எகிப்திய கட்டடக் கலைக்கு அடிப்படையாக அமைந்தது,
(1) பாரா அரசர்களுக்காக லௌகீகக் கட்டடங்களை அமைக்க வேண்டிய தேவைப்பாடாகும்.
(2) மரணத்தின் பின்னரான வாழ்வின் நிலவுகைக்கான நம்பிக்கை முறைமையாகும்.
(3) இறந்தவர்களின் உடல்களை நிலையாகப் பேணி வைக்க வேண்டிய தேவைப்பாடாகும்.
(4) பாரா அரசர்களின் வீரபராக்கிரமங்களைக் காட்டுவதற்கு எடுக்கப்பட்டதோர் முயற்சியாகும்.
(5) பாரா அரசர்களின் வாழ்க்கை தொடர்பான நினைவுச் சின்னங்களை நிறுவும் தேவையாகும். (.........)

- **31** தொடக்கம் **35** வரையான ஒவ்வொரு வினாவுக்கும் **மிகப் பொருத்தமான விடையை** அதற்கு முன்னாலுள்ள கட்டடக்கலை நிர்மாணிப்புகளை அடிப்படையாகக் கொண்டு தெரிவுசெய்க.

**31.** கற்சுவரினால் சூழப்பட்ட இந்த போதிகர அமைந்துள்ளது,



(1) பண்டுவஸ்நுவரயில் ஆகும்.
(2) படிகெம்கலயில் ஆகும்.
(3) நில்லக்கமயில் ஆகும்.
(4) ஹத்திகுச்சி விகாரையில் ஆகும்.
(5) லாகுகல மகுல்மடு விகாரையில் ஆகும். (.........)

**32.** அனுராதபுரக் காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட இக்கட்டடம்,



(1) மகாமெவுனா பூங்காவில் அமைந்துள்ள உபோசதகர ஆகும்.
(2) கற்றூண்களின் தொகுதி ஒன்றின் மீது நிர்மாணிக்கப்பட்ட மாளிகையாகும்.
(3) துட்டகைமுனு மன்னனால் நிர்மாணிக்கப்பட்டதொரு கூட்ட மண்டபமாகும்.
(4) கற்றூண்களின் மீது அமைக்கப்பட்ட அரச மாளிகை ஆகும்.
(5) பிக்குகளுக்காக நிர்மாணிக்கப்பட்ட ஒன்பது மாடிகளைக் கொண்ட மாளிகை ஆகும். (.........)



Department of Examinations - Sri Lanka

**33.** தற்போது சிதைவுகளாக எஞ்சியுள்ள இக்கட்டடக்கலை நிர்மாணிப்பு,



(1) அனுராதபுரத்தின் விஜயபாகு அரச மாளிகையாகும்.
(2) பொலன்னறுவையின் விஜயபாகு அரச மாளிகையாகும்.
(3) பராக்கிரம சமுத்திரத்திற்கு அருகில் அமைந்துள்ள நிஸ்ஸங்கமல்லன் அரச மாளிகையாகும்.
(4) பொலன்னறுவை லங்காதிலக சிலைமனையாகும்.
(5) பராக்கிரமபாகு மன்னனின் அரச் சபையான விஜயோத்பாய ஆகும். (.........)

**34.** இந்த தாஜ்மஹால் கட்டடம்,




(1) மொகலாய ஆட்சிக்காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட மாளிகையாகும்.
(2) ஆக்ரா நகரில் நிர்மாணிக்கப்பட்ட சமய நினைவுச் சின்னமாகும்.
(3) மொகலாயர்களின் காலத்தில் வெண்பளிங்குக் கற்களினால் நிர்மாணிக்கப்பட்ட மாளிகை ஆகும்.
(4) ஹுமாயன் அரசனை நினைவுகூர்வதற்காக நிர்மாணிக்கப்பட்ட கட்டடமாகும்.
(5) கோளவடிவ சிகரத்தைக் கொண்ட இஸ்லாமிய மாளிகை ஆகும். (.........)

**35.** தற்போது சிதைவுகளுக்குட்பட்டுக் காணப்படும் இந்த கொலோசியம் கட்டடம்,



(1) திறந்த வெளியரங்கு பற்றிய எண்ணக்கருவின் ஆரம்ப நிலையாகும்.
(2) கிரேக்க பாரம்பரிய கட்டடக்கலை மாதிரிக்கமைய நிர்மாணிக்கப்பட்டதாகும்.
(3) உரோமர்களின் அதிகார பலத்தினை வெளிப்படுத்தும் அரச கட்டடமாகும்.
(4) உரோமர்களின் யுத்த வெற்றிகளை நினைவூட்டும் மிகப்பெரிய நிர்மாணிப்பாகும்.
(5) உரோம நகரில் நிர்மாணிக்கப்பட்ட நீள்வட்ட வடிவான அமைப்பைக் கொண்ட திரையரங்காகும். (.........)

● **36** தொடக்கம் **40** வரையான ஒவ்வொரு வினாவுக்கும் **மிகச் சரியான விடையை,** பின்வரும் ஓவியத்தைப் பயன்படுத்தி தெரிவுசெய்க.



**36.** இந்த ஓவியத்தைக் காணக்கிடைப்பது,
(1) தெல்வத்த ரஜமகாவிகாரையில் ஆகும்.
(2) தம்புள்ளை குகை விகாரையில் ஆகும்.
(3) கத்தலுவ பூர்வாராமயவில் ஆகும்.
(4) முல்கிரிகல ரஜமகா விகாரையில் ஆகும்.
(5) கரகம்பிட்டி சுபோதாராமயவில் ஆகும். (.........)

Department of Examinations - Sri Lanka

**37.** இந்த ஓவியத்தின் கருப்பொருளாய் அமைந்தது,
(1) பௌத்த மத ஊர்வலம் (பெரஹரா) ஒன்றின் காட்சியாகும்.
(2) நடனமாடும், பாடல்களை இசைக்கும் கலைஞர்களாவர்.
(3) தேலபத்த ஜாதகக் கதையில் வரும் ஒரு சந்தர்ப்பமாகும்.
(4) வெஸ்ஸந்தர ஜாதகக் கதையிலுள்ள ஒரு சம்பவமாகும்.
(5) விகாரையொன்றில் பூஜை நடாத்தப்படும் விதமாகும். (.........)

**38.** இந்த ஓவியத்தின் பாணிக்கமைய அது உரித்தாவது,
(1) பொலன்னறுவை காலத்தின் இறுதியில் அழிவுற்ற ஓவிய மரபொன்றிற்காகும்.
(2) பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் உருவான தாழ்நாட்டு ஓவிய மரபிற்காகும்.
(3) கண்டி ராசதானி வீழ்ச்சியுற்றதன் பின்னர் உருவான கிராமியக் கலை மரபிற்காகும்.
(4) பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் உருவான மத்திய கண்டி மரபிற்காகும்.
(5) கண்டி ராசதானி காலத்தில் நிலவிய பிரதேசரீதியானதொரு பாணிக்காகும். (.........)

**39.** இந்த ஓவியத்தில்,
(1) அசைவு நிலைகளை, மரபுரீதியான பண்புகளுக்கமைய தளத்தின் மீது ஒன்றிணைப்பதற்கு முயற்சிக்கப்பட்டுள்ளது.
(2) உருவங்களை ஒன்றுடனொன்று இணைக்கும்போது அசைவும் செயற்பாங்கும் மிகச் சிறப்பாகக் காட்டப்பட்டுள்ளது.
(3) ஒருங்கிணைப்பு உபாயமாக பெண்களின் உருவங்கள் வட்ட வடிவ மாதிரியில் ஒன்றிணைக்கப்பட்டுள்ளன.
(4) தாள ஓட்டத்துக்கமைவான தன்மையின் மூலம் ஒருங்கிணைப்பின் உயிர்ப்பான பண்பு மிக நேர்த்தியாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.
(5) பக்கத் தோற்றங்களைக் கொண்ட மனித உருவங்கள் கட்டுப்பாட்டுடன் தளத்தின் மீது பயன்படுத்தப்பட்டுள்ளன. (.........)

**40.** இந்த ஓவியத்தில் வெளிப்படும் சிறப்பம்சமாக அமைவது,
(1) இளமையின் அழகியல் தன்மை சிறப்பாக ஓவிய மொழியில் வெளிப்படுத்தப்பட்டுள்ளமையாகும்.
(2) ஒலி நயத்தைக் கவர்வதனை விளைவாக காட்டுவதற்கு முயற்சிக்கப்பட்டுள்ளமையாகும்.
(3) நடனமாதர்களின் சுறுசுறுப்பான நிலைகளின் உயிர்ப்பான பண்பு காட்டப்பட்டுள்ளமையாகும்.
(4) நடனமாடும், இசைக் கருவிகளை இசைக்கும் சுறுசுறுப்பான நிலைகளின் மூலம் வியத்தகு சந்தர்ப்பமொன்று சித்திரிக்கப்பட்டுள்ளமையாகும்.
(5) நலினமான பெண் உருவங்களின் உயிர்ப்பான தன்மையை எடுத்துக்காட்டுவதற்கு முயற்சிக்கப்பட்டுள்ளமையாகும். (.........)

* *

Department of Examinations Sri Lanka

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

අ.පො.ස (උ.පෙළ) විභාගය / க.பொ.த. (உயர் தர)ப் பரீட்சை - 2021 (2022)

විෂය අංකය / பாட இலக்கம்: **51**

විෂයය / பாடம்: **சித்திரக்கலை**

ලකුණු දීමේ පටිපාටිය / புள்ளி வழங்கும் திட்டம்
I පත්‍රය / பத்திரம் I

| ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | 3 | 11. | 3 | 21. | 2 | 31. | 3 |
| 02. | 2 | 12. | 5 | 22. | 5 | 32. | 1 |
| 03. | 4 | 13. | 3 | 23. | 1 | 33. | 5 |
| 04. | 1 | 14. | 4 | 24. | 4 | 34. | 3 |
| 05. | 5 | 15. | 2 | 25. | 3 | 35. | 5 |
| 06. | 1 | 16. | 4 | 26. | 1 | 36. | 4 |
| 07. | 4 | 17. | 1 | 27. | 4 | 37. | 3 |
| 08. | 4 | 18. | 1 | 28. | 3 | 38. | 2 |
| 09. | 4 | 19. | 4 | 29. | 4 | 39. | 1 |
| 10. | 2 | 20. | 5 | 30. | 2 | 40. | 2 |

✪ විශේෂ උපදෙස් / விசேட அறிவுறுத்தல் :

එක් පිළිතුරකට / ஒரு சரியான விடைக்கு 01 ලකුණු බැගින් / புள்ளி வீதம்

මුළු ලකුණු / மொத்தப் புள்ளிகள் 1 x 40 = 40

Department of Examinations - Sri Lanka

සියලු ම හිමිකම් ඇවිරිණි /முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் Department of Examinations, Sri Lanka

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2021(2022)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2021(2022)
General Certificate of Education (Adv. Level) Examination, 2021(2022)

චිත්‍ර කලාව I
சித்திரக்கலை I
Art I

51 T I

## பகுதி II

※ இப்பகுதி **மூன்று** உப பகுதிகளைக் கொண்டுள்ளது.

※ **'அ'** பகுதியிலிருந்து எவையேனும் **இரண்டு** வினாக்களையும் **'ஆ'**, **'இ'** ஆகிய ஒவ்வொரு பகுதியிலிருந்தும் ஒரு வினா வீதமும் தெரிவுசெய்து **நான்கு** வினாக்களுக்கு விடை எழுதுக.
(தேவையான இடங்களில் பரும்படிப் படங்களைப் பயன்படுத்துதல் உங்களுக்கு அனுகூலமாக அமையும்.)

### பகுதி - அ

### (சித்திரக்கலையின் மதிப்பீடும் இரசனையும் - இலங்கை)

**1.** அனுராதபுரக் காலத்தில் நிலவிய சுவர் ஓவிய மரபு பொலன்னறுவைக்கால இறுதி வரையிலும் தொடர்ச்சியாக நிலவி வந்தமைக்கான சான்றுகள் காணப்படுகின்றன.

(i) ஹிந்தகலை குகை விகாரையின் பழைய சுவர் ஓவியங்களில் எஞ்சியிருந்த சுவரோவியப் பகுதிக்காகப் பயன்டுத்தப்பட்ட கருப்பொருள்கள் **இரண்டினதும்** பெயர்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) சிகிரியா சுவரோவியங்களில் பெண் உருவங்கள் பல்வகைமையைக் கொண்டதாக வரையப்பட்டுள்ள விதம் தொடர்பாக சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)

(iii) பொலன்னறுவை திவங்க சிலைமனையின் பழைய ஓவியங்கள், மஹியங்கனை தாதுகர்ப்பத்தின் ஓவியங்கள் ஆகியவற்றை ஒப்பீட்டுரீதியில் மதிப்பிடுக. (08 புள்ளிகள்)

**2.** பொலன்னறுவைக் காலத்தில் பௌத்த சமய கட்டடங்களை நிர்மாணிக்கும்போது அதனுடன் இணைந்த இந்து சமய கட்டடக்கலைப் பண்புகள் கம்பளை, கண்டி காலங்களிலும் அவ்வாறே காணக்கிடைத்தன.

(i) பொலன்னறுவைக் காலத்தில் கெடிகே மரபுக்கமைய செங்கற்களினால் நிர்மாணிக்கப்பட்ட பௌத்த சமய கட்டடக்கலை நிர்மாணிப்புகள் **இரண்டின்** பெயர்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) இரண்டாம் சிவாலயத்தில் காணக்கிடைக்கும் இந்து சமய கட்டடக்கலைப் பண்புகளைச் சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)

(iii) கம்பளைக் காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட கடலாதெனிய விகாரையில் இந்து சமய கட்டடக்கலைப் பண்புகள் பௌத்த சமய முகத்தோற்றத்துடன் பயன்படுத்தப்பட்டுள்ள விதம் தொடர்பாக ஆராய்க. (08 புள்ளிகள்)

**3.** ஐரோப்பிய நவீன கலைப் போக்குகளை அடிப்படையாகக் கொண்டு, இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் உருவான, இலங்கையின் ஓவிய, சிலைக் கலைஞர்களால் சகாப்த சாதனைகள் படைக்கப்பட்டுள்ளன.

(i) நவீன சிலைக் கலையின் கலைநுட்பங்களைப் பயன்படுத்தி திஸ்ஸ ரணசிங்கவினால் நிர்மாணிக்கப்பட்ட சிலைகள் **இரண்டின்** பெயர்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) ஓவியர் ஸ்டான்லி அபேசிங்கவின் ஓவியப்பாணி தொடர்பாக அவரது படைப்புகளை அடிப்படையாகக் கொண்டு சுருக்கமாக மதிப்பிடுக. (05 புள்ளிகள்)

(iii) 43 ஆம் குழுவின் முதன்மை ஓவியரான ஜவன் பீரிஸின் 'திரும்பி வருதல்', 'கல்கிஸ்ஸ' ஆகிய ஓவியங்களை அடிப்படையாகக் கொண்டு, அவரது படைப்புகளில் வெளிப்படும் மேற்கத்திய நவீன ஓவியப் போக்குகள் பற்றி ஆராய்க. (08 புள்ளிகள்)

Department of Examinations - Sri Lanka

## பகுதி - ஆ

### (சித்திரக்கலையின் மதிப்பீடும் இரசனையும் - இந்தியா)

**4.** மௌரிய வம்சத்தைச் சேர்ந்த தர்மாசோக மன்னனின் ஆட்சிக்காலத்தில் தொடங்கிய பௌத்த கலை மரபு குப்தர் காலத்தின் இறுதி வரை நிலவியது.

(i) அசோகத் தூண்கள் **இரண்டின்** பெயர்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) சாஞ்சி தூபியின் கட்டடக்கலைப் பண்புகள் தொடர்பாக சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)

(iii) "அஜந்தா சுவரோவியங்களில் தேரவாத, மகாயான மரபுகள் இரண்டிற்குமுரிய ஓவியங்கள் காணக்கிடைக்கின்றன." ஒப்பீட்டுரீதியில் ஆராய்க. (08 புள்ளிகள்)

**5.** இந்திய பௌத்த கலை மரபுகளில் சிலை நிர்மாணிப்புகளில் பல்வேறு வேறுபாடுகளைக் காணத்தக்கதாயுள்ளது.

(i) காந்தாரக் கலை மரபுக்கமைய நிர்மாணிக்கப்பட்ட **இரண்டு** சிலைகளின் பெயர்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) மதுரா மரபுக்குரிய கத்ரா புத்தர் சிலை பற்றி சுருக்கமாக அறிமுகம் செய்க. (05 புள்ளிகள்)

(iii) குப்தர் காலத்துக்குரிய மதுரா புத்தர் சிலையிலும் சாராணாத் புத்தர் சிலையிலும் காணத்தக்க கலைப் பண்புகளை ஒப்பீட்டுரீதியில் பகுப்பாய்க. (08 புள்ளிகள்)

## பகுதி - இ

### (சித்திரக்கலையின் மதிப்பீடும் இரசனையும் - ஐரோப்பா)

**6.** 'அதியதார்த்தவாதம்' (surrealism) என்பது இருபதாம் நூற்றாண்டின் ஓவியக் கலையை புதியதோர் பாதைக்கு இட்டுச் சென்ற கலைப்போக்காகும்.

(i) அதியதார்த்தவாத ஓவியக் கலைஞர்கள் **இருவரின்** பெயர்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) அதியதார்த்தவாதக் கலையின் அடிப்படைப் பண்புகளைச் சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)

(iii) அதியதார்த்தவாதமானது யதார்த்தவாதக் கலையிலிருந்தும் அருபவாதக் கலையிலிருந்தும் வேறுபடும் விதத்தை 'இறவாத ஞாபகம்' என்ற ஓவியத்தை அடிப்படையாகக் கொண்டு ஆராய்க. (08 புள்ளிகள்)

**7.** புராதன காலத்தில் பலம் வாய்ந்ததோர் இராச்சியமாக விளங்கிய எகிப்தின் கலைப் படைப்புகளில் அவர்களுக்கேயுரிய தனித்துவமான மரபுரீதியான பண்புகள் பரவலாகக் காணக்கிடைத்தன.

(i) மரபுரீதியான பண்புகளைக் கொண்ட எகிப்திய சிலைகள் **இரண்டின்** பெயர்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) எகிப்திய சிலைகளில் காணத்தக்க மரபுரீதியான பண்புகளைச் சுருக்கமாக விளக்குக.(05 புள்ளிகள்)

(iii) மரபுரீதியான எகிப்திய ஓவியக்கலைப் பண்புகளுக்கமைய 'நடனமாதுக்களும் இசைக்கலைஞர்களும்' என்ற ஓவியம் மிகச்சிறப்பானதோர் நிர்மாணிப்பாகும் என்பதனை 'பறவை வேட்டை' என்ற ஓவியத்துடன் ஒப்பிட்டு விளக்குக. (08 புள்ளிகள்)

* * *

Department of Examinations Sri Lanka

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2021(2022)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2021(2022)
General Certificate of Education (Adv. Level) Examination, 2021(2022)

| | |
|---|---|
| චිත්‍ර කලාව | II |
| சித்திரக்கலை | II |
| Art | II |

**51 T II**

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

| | | |
|---|---|---|
| අමතර කියවීම් කාලය | - | මිනිත්තු 10 යි |
| மேலதிக வாசிப்பு நேரம் | - | 10 நிமிடங்கள் |
| Additional Reading Time | - | 10 minutes |

**உமக்கு முன்னால் வைக்கப்பட்டுள்ள பொருள் தொகுதியை நன்றாக விளங்கிக்கொள்வதற்கு மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

**அறிவுறுத்தல்கள் :**

- உமது **சுட்டெண்ணைச்** சித்திரம் வரையும் தாளின் **மறுபக்கத்தில்** தெளிவாக எழுதுக.
- வர்ணச் சித்திரம் வரைவதற்காக உமக்கு வழங்கப்பட்டுள்ள விசேட **வரைதல் தாளைப்** (Drawing paper) பயன்படுத்துக. வேறு எந்தவொரு சித்திரத்தையோ பரும்படிக் குறிப்பையோ வரையத் தேவையில்லை.
- விடைத்தாளைப் பரீட்சை மேற்பார்வையாளரிடம் கையளிக்கும்போது அது நன்கு உலர்ந்திருத்தல் முக்கியமானது. ஈரமான சித்திரங்கள் ஒன்றுடன் ஒன்று ஒட்டிக்கொள்வதற்குச் சந்தர்ப்பம் உள்ளமையினால், அது உமக்குப் பாதகமானதாக அமையலாம்.

## இயற்கைக் கற்றலும் அசையாப் பொருள்கூட்டச் சித்திரமும்

பின்வரும் அறிவுறுத்தல்களைக் கவனத்திற் கொண்டு உமக்கு முன்னால் வைக்கப்பட்டுள்ள பொருள்தொகுதியை வரைந்து, வர்ணந்தீட்டுக.

※ கடதாசிப் பரப்பினைப் பொருத்தமானவாறு பயன்படுத்திச் சித்திர ஒழுங்கமைப்பினைச் செய்க.

※ பொருள்களின் இயல்பு, வெளிப்புறத் தன்மை, பரிமாணம், கண்மட்டம், முப்பரிமாண இயல்பு, தூரதரிசனக் கோட்பாடுகள் ஆகியன பற்றிக் கவனத்திற் கொள்க.

※ உமக்குத் தெரிகின்ற விதத்தில் பொருள்தொகுதியை வரைந்து அதன்மீது ஒளி, இருள் விழுகின்ற தன்மையைக் கவனத்திற் கொண்டு வர்ணந்தீட்டுக.

※ வர்ண ஊடகங்களைக் கையாளுகின்ற நுட்பமுறைகளைப் பொருத்தமானவாறு பயன்படுத்துக.

※ பொருள்தொகுதிக்குப் பொருத்தமான வர்ணப் பின்னணியைப் பயன்படுத்துக.

※ பொருள்தொகுதி வைக்கப்பட்டுள்ள ஆதாரப்பலகையின் அளவைப் பொருள்கூட்டத்திற்குப் பொருத்தமானதாக மாற்றிக்கொள்ள முடியும்.

※ நீர் வர்ணம், போஸ்ரர் வர்ணம், தூள் வர்ணம், பஸ்ரல் ஆகிய வர்ண ஊடகங்களுள் ஒன்றையோ சிலவற்றைக் கலந்தோ பயன்படுத்திக் கொள்ளலாம்.

※ ※ ※

Department of Examinations, Sri Lanka

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved ]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் Department of Examinations, Sri Lanka

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2021(2022)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2021(2022)
General Certificate of Education (Adv. Level) Examination, 2021(2022)

චිත්‍ර කලාව III
சித்திரக்கலை III
Art III

**51 T III**

පැය තුනයි
*மூன்று மணித்தியாலம்*
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

**வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

**அறிவுறுத்தல்கள் :**

※ உமது **சுட்டெண்ணையும்** தெரிவுசெய்த **வினாவின் இலக்கத்தையும்** சித்திரம் வரையும் தாளின் **மறுபக்கத்தில்** தெளிவாக எழுதுக.

※ நீர் வர்ணம், போஸ்ரர் வர்ணம், தூள் வர்ணம், பஸ்ரல் போன்ற வர்ண ஊடகம் ஒன்றையோ அல்லது ஊடகங்கள் சிலவற்றைக் கலந்தோ பயன்படுத்திக் கொள்ளமுடியும்.

※ தேவைப்படுவோருக்குத் திசுத்தாள் வழங்கப்படும்.

※ சித்திரத்தைக் கையளிக்கும்போது அது முழுமையாக உலர்ந்திருத்தல் முக்கியமாகும். ஈரமான சித்திரங்கள் ஒன்றுடனொன்று ஒட்டிக்கொள்வதற்கு வாய்ப்புள்ளமையினால் அது உமக்குப் பாதகமானதாக அமையலாம்.

- பின்வரும் **அ, ஆ, இ** ஆகிய பகுதிகளிலிருந்து **ஒரு** தலைப்பை மாத்திரம் தெரிவுசெய்து, **வர்ணச் சித்திரம்** ஒன்றை வரைக.

**பகுதி - அ : சித்திர ஒழுங்கமைப்பு**

**1.** சூறாவளி காரணமாக கடல் அலையில் சிக்குண்டு தத்தளிக்கும் மீனவர் படகு

**2.** சமய சார்பான இரவுத் திருவிழா அல்லது ஊர்வலக் காட்சி

**3.** வைத்தியசாலையொன்றின் வெளி நோயாளர் பிரிவில் உள்ள ஒரு சந்தர்ப்பம்

**4.** தாவரங்கள் காணப்படும் குளக்கரை ஒன்றிற்கு வந்துள்ள விலங்குகளைப் பார்வையிடும் உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள்

**பகுதி - ஆ : அலங்கார ஆக்கம்**

**5.** புடைவை அச்சிடலுக்குப் பயன்படுத்தத்தக்க பரவல் அலங்காரம் ஒன்றின் $9'' \times 9''$ அளவுப் பகுதியொன்றை பிராணிகளின் அரூப வடிவங்களைப் பயன்படுத்தி நிர்மாணிக்குக.

**6.** வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு விற்பனை செய்வதனை நோக்கமாகக் கொண்டு இலங்கைக்கே உரித்தான தனித்துவம் பேணப்படும் விதத்தில் நிர்மாணிக்கப்பட்ட பை (Bag) ஒன்றின் முன்பக்க அலங்காரத்திற்குப் பொருத்தமான அழகிய முழுத்தள அலங்காரமொன்றை நிர்மாணிக்குக.

**7.** இயற்கையின் வனப்பை வீட்டின் உள்ளகத்தில் ஏற்படுத்திக் கொள்வதற்காக $5' \times 10'$ அளவிலான வெளிக்குப் பொருத்தமான சுவர் செதுக்கல் திட்டமொன்றை அளவிடைக்குப் பொருத்தமான விதத்தில் வரைந்து பொருத்தமானவாறு வர்ணமிடுக.

**பகுதி - இ : கிறபிக் சித்திர ஆக்கம்**

**8.** சுகாதார அறிவுறுத்தல்களைப் பின்பற்றுவதன் மூலம் கொரோனா வைரஸைத் தோற்கடிக்க முடியும் என்பதனை சமூகத்திற்கு அறிவுறுத்தும் நோக்கில் கருத்துள்ள, அழகிய சுவரொட்டியொன்றை நிர்மாணிக்குக.

**9.** ‘2050 இல் செவ்வாய்க் கிரகம்’ என்ற தலைப்பிலான நாவல் ஒன்றுக்கு மேலட்டையொன்றை வரைந்து வர்ணமிடுக. (முன்னட்டை, தடிப்பு (Spine), பின்னட்டை ஆகியவற்றைக் கொண்டிருக்க வேண்டும்)

**10.** பெண்களுக்காக உள்நாட்டு மூலிகைகள் கலந்து தயாரிக்கப்படும் தலைமுடிக்குப் பயன்படுத்தும் எண்ணெய் போத்தல் ஒன்றை, சர்வதேச சந்தைக்குப் பொருத்தமான விதத்தில் பொதியிடக்கூடிய பெட்டியொன்றைத் திட்டமிட்டு வர்ணமிடுக.

Department of Examinations - Sri Lanka

## பகுதி - அ

## (சித்திரக்கலையின் மதிப்பீடும் இரசனையும் - இலங்கை)

**1.** அனுராதபுரக் காலத்தில் நிலவிய சுவர் ஓவிய மரபு பொலன்னறுவைக்கால இறுதி வரையிலும் தொடர்ச்சியாக நிலவி வந்தமைக்கான சான்றுகள் காணப்படுகின்றன.

(i) ஹிந்தகலை குகை விகாரையின் பழைய சுவர் ஓவியங்களில் எஞ்சியிருந்த சுவரோவியப் பகுதிக்காகப் பயன்டுத்தப்பட்ட கருப்பொருள்கள் **இரண்டினதும்** பெயர்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

- புத்தர் தர்மபோதனை செய்தல் (வலது)
  (துஸித தேவலோக சக்கரவர்த்திக்கு புத்தர் தர்மஉபதேசம் செய்யும் காட்சி)

- தபஸ்சு, பல்லுக வியாபாரிகளின் தானத்தை ஏற்கும் காட்சி (இடது)

(ii) சிகிரியா சுவரோவியங்களில் பெண் உருவங்கள் பல்வகைமையைக் கொண்டதாக வரையப்பட்டுள்ள விதம் தொடர்பாக சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)

- அநுராதபுர காலத்தில் சிறந்த ஓவியமாகவும் பாதுகாக்கப்பட்ட சுவரோவியமாகவும் சிகிரியா காணப்படுகிறது.
- சிகிரிய பெண்களின் ஒவ்வொரு உருவத்துக்கும் தனித்துவமான பாவ வெளிப்பாடு காட்டப்பட்டுள்ளது. (கை, கைவிரல்கள், முத்திரைகள் வெவ்வேறுபட்டன)
- இடுப்பின் மேற்பகுதியில் பெண்களின் உருவங்கள் வரையப்பட்டுள்ளது.
- உடல்நிலை வெளிப்பாடும் ஒன்றுக்கொன்று வேறுபட்டுள்ளன.
- பக்கப் பார்வையாகவும், அரைவாசி திரும்பியவாறும் பெண்கள் வரையப்பட்டுள்ளன.
- இப்பெண் உருவங்கள், பொன்நிறத்திலும், இருள் வர்ணத்திலும் காட்டப்பட்டுள்ளனர்.
- இலக்கியத் தன்மையுடனும் மெருகூட்டற் பாணியுடன் பெண் உருவங்கள் வரையப்பட்டுள்ளன.
- தனியாகவும், சோடியாகவும் வரையப்பட்டுள்ளது.
- அகன்ற இடையுடன், நிறைந்த மார்பகங்களுடன், நீண்ட கழுத்துடன், மெல்லிய விரல்கள் காட்டி நீண்ட கண்கள் காட்டி வரையப்பட்டுள்ளன.
- பெண்களின் ஆடை, ஆபரண அலங்கரிப்புக்களில் உயர்குலப் பெண்களும், பணிப்பெண்களும் பிரித்து வேறுபடுத்தி காட்டப்பட்டுள்ளனர்.
- வேறுபட்ட மனநிலைகளில் இப்பெண்களின் உருவங்கள் வரையப்பட்டுள்ளன.
- அதிகமான உருவங்கள் இளம் பெண்களை குறிப்பதாகவும் மேலும் நடுத்தர வயதுப் பெண்களும், வயது முதிர்ந்த பெண்களும் காட்டப்பட்டுள்ளனர்.
- பெண் உருவங்கள் சிலர் பூக்களை தலையில் வைத்தபடியும், தட்டுக்களில் ஏந்திய படியும் வரையப்பட்டுள்ளனர்.
- பெரும்பாலான பெண் உருவங்கள் கீழ் நோக்கிய பார்வையுடன் வரையப்பட்டுள்ளன. மேல்நோக்கிய பார்வையுடன் உயர்த்திய புருவத்துடன் ஒரு பெண் உருவம் வரையப்பட்டுள்ளது.

Department of Examinations - Sri Lanka

(iii) பொலன்னறுவை திவங்க சிலைமனையின் பழைய ஓவியங்கள், மஹியங்கனை தாதுகர்ப்பத்தின் ஓவியங்கள் ஆகியவற்றை ஒப்பீட்டுரீதியில் மதிப்பிடுக. (08 புள்ளிகள்)

**வேற்றுமை**

| திவங்க சிலை மனை | மஹியங்கனை |
|---|---|
| • காலப்பகுதி – பொலனறுவை | • அநுராதபுரம் |
| • பொலனறுவ யுகத்தில் அதிக ஓவியங்கள் காணப்படும் இடம் திவங்கசிலைமனை ஆகும். | • குறைந்தளவு ஓவியங்கள் காணப்படும். |
| • நுட்பமுறை – தொல்சீர் இயற்கைகார் கலைப்பண்பும், கண்டிய ஓவிய மரபின் அடிப்படைப் பண்பையும் கொண்டது. | • ஒரு காலப்பகுதிக்குரிய ஓவியங்கள் மட்டும் காப்படுகிறது. |
| • கி.பி 12 ஆம் நூற்றாண்டுக்குரியது. | • கி.பி 09 ஆம் நூற்றாண்டுக்குரியது. |
| • அர்த்தமண்டபம், அந்தராளம், கர்ப்பகிரம் ஆகிய பகுதிகளில் ஓவியங்கள் வரையப்பட்டுள்ளது. | • தாதுவின் அண்டப்பகுதியில் வரையப்பட்டுள்ளது. |
| • வாழ்க்கை படிமுறைக்கேற்ப புத்தரின் கருப்பொருள்கள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. (புத்தரின் வாழ்க்கைச் சம்பவங்கள் / தெய்வப்பருவங்கள்/ ஞானம் பெற்ற பருவங்கள்) | • புத்தரின் உரு இருந்த நிலையில் காட்டப்பட்டுள்ளது. (ஒளி வட்டம் காட்டப்பட்டுள்ளது) • பின்னனியில் அரசமரம் காட்டப்பட்டுள்ளது. |
| • திவங்க சிலைமனையில் புத்தரின் உரு சாந்தமான முகத்துடன் வரையப்பட்டுள்ளது. | • சிரித்த முகத்துடன் வரையப்பட்டுள்ளது. |
| • ஓவியங்கள் இரு வரிகளில் வரையப்பட்டுள்ளது. | |
| • சங்கிஸ்ஸபுர வருகை ஓவியத்தில் புத்தர் திரிபங்க நிலையில் காட்டப்பட்டுள்ளார் | |

**ஒற்றுமை**

- உலர்சுதை முறையில் வரையப்பட்டுள்ளது.
- இரண்டும் சமயம் சார்ந்தவை.
- திவங்க சிலை மனை – ஜாதகக்கதை / புத்தர் சரிதைகள் (தேவராதணை / சங்கிஸ்ஸர வருகை)
- திவங்க சிலை மனை – புத்தர் முத்தி நிலை அடைதல்

  – விஸ்ணு உருவம் (4 கைகளுடன் வசீகரமாக காட்டப்பட்டுள்ளது)
- வர்ணச்சாயல் இரண்டிலும் ஒரே தன்மை கொண்டவை
- இரேகைப்பயன்பாடு ஒத்த தன்மையில் காணப்படுகிறது
- மகியங்கணை இல 3 இல் உருவங்களில் காணும் உடல் நிலைகள் திவங்க தேவாராதனை ஓவியங்களை ஒத்துக்காணப்படுகின்றது.
- இரு ஆலயங்களிலும் தொல்சீர் மரபுரீதியிலான பண்புகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

Department of Examinations - Sri Lanka

**2.** பொலன்னறுவைக் காலத்தில் பௌத்த சமய கட்டடங்களை நிர்மாணிக்கும்போது அதனுடன் இணைந்த இந்து சமய கட்டடக்கலைப் பண்புகள் கம்பளை, கண்டி காலங்களிலும் அவ்வாறே காணக்கிடைத்தன.

(i) பொலன்னறுவைக் காலத்தில் கெடிகே மரபுக்கமைய செங்கற்களினால் நிர்மாணிக்கப்பட்ட பௌத்த சமய கட்டடக்கலை நிர்மாணிப்புகள் **இரண்டின்** பெயர்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

- தூபராம சிலைமனை
- இலங்காதிலக சிலைமனை
- திவங்க சிலைமனை

(ii) இரண்டாம் சிவாலயத்தில் காணக்கிடைக்கும் இந்து சமய கட்டடக்கலைப் பண்புகளைச் சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)

- பொலனறுவையில் அமைக்கப்பட்ட மிகப்பழமையான கருங்கல் ஆலயம்
- வட கிழக்காக அமைக்கப்பட்டுள்ளது
- அர்த்த மண்டபம், இடைமண்டபம், கர்ப்பக்கிரகம்என்றவாறு மண்டப அமைப்பை கொண்டது.
- அந்தராளம் நில மட்டத்திலிருந்து உயரமாக அமைக்கப்பட்டுள்ளது.
- 8 முகங்களுடன் கூடிய தூண் அமைப்பு காட்டப்பட்டுள்ளது
- கர்ப்பக்கிரகத்தின் நடுப்பகுதியில் சிவலிங்கம் அமைந்துள்ளது.
- இவ்வாலயத்தை சுற்றி பெரிய மதில் காணப்படுகிறது.
- இவ் ஆலயத்துக்குள் பிரவேசிக்க இரு வாயில்கள் காணப்படுகிறது.
- பொரதம் கலை நுட்பத்துடன் காட்டப்பட்டுள்ளது.
- தூண்கள் வெளித்தள்ளியவாறு அமைக்கப்பட்டுள்ளது.
- தென்னிந்திய சோழர் கலை மரபில் கட்டப்பட்டது.
- விமான அமைப்பானது தெய்வ உருவங்களைக் கொண்டுள்ளது.
- சிகரம் எண்கோண சிறு வடிவில் அமைக்கப்பட்டுள்ளது.
- போதிகையானது அலங்காரம் கொண்ட மணியுருக்கட்டுக்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளது.
- இராஜ ராஜ சோழ மன்னனால் கட்டப்பட்ட இவ் ஆலயம் வானவர் மாதேவி ஈஸ்வரமுடையான் எனவும் அழைக்கப்படுகிறது.

Department of Examinations - Sri Lanka

(iii) கம்பளைக் காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட கடலாதெனிய விகாரையில் இந்து சமய கட்டடக்கலைப் பண்புகள் பௌத்த சமய முகத்தோற்றத்துடன் பயன்படுத்தப்பட்டுள்ள விதம் தொடர்பாக ஆராய்க. (08 புள்ளிகள்)

**இந்து சமய கட்டிடக்கலைப் பண்புகள்**

- கம்பளை காலத்துக்குரியது.
- கணேஸ்வராச்சாரியரால் கட்டப்பட்டது.
- 4 ஆம் புவனேகபாகு மன்னன் காலத்தில் கட்டப்பட்டது.
- பிரதான மண்டபம், அந்தராளம், கர்பக்கிரகம் ஆகிய பகுதிகளைக் கொண்டது.
- இவ்விகாரை இந்தியாவின் விஜயநகர கட்டடக்கலை பாணியில் அமைக்கப்பட்டுள்ளது.
- சிகரம் கெடிகே நுட்பமுறையில் காணப்படுகிறது.
- வெளிப்புற சுவர்களின் அமைப்பு (புடைப்புடன் வெளித்தள்ளிய தூண்கள், விமானங்கள்)
- அதன் வெளிச்சுவரில் கற்சிற்பங்களான மனித உருவங்கள், தெய்வ உருவங்கள் (நடராஜர் / விஸ்ணு / கோபால உருவம்) யானை, எருது உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன.
- பிரவேச மண்டபத்தின் அடித்தளத்தில் இசைக்கலைஞர்களின் உருவங்கள் அரைப்புடைப்பு நுட்பமுறையில் செதுக்கப்பட்டுள்ளன.
- எண்கோண, சதுர வடிவமைப்பைக் கொண்ட மூன்று ஒன்றினைக்கப்பட்ட கற்றூண்கள் தென்னிந்திய மரபில் அமைக்கப்பட்டுள்ளது.

**பௌத்த சமய கட்டடக்கலைப் பண்புகள்**

- பிரவேச மண்டபத்தின் அடித்தளத்தில் சந்திரவட்டக்கல் காணப்படுகிறது
- கர்ப்பக்கிரகத்தில் மகரதோரணத்தின் நடுவில் பிரதான அமர்ந்தநிலை புத்தர் சிலை காணப்படுகிறது. மேலும் இதைத்தவிர 4 நின்ற புத்தர் சிலைகளும் காணப்படுகின்றது.
- கர்ப்பக்கிரகத்தின் உச்சியில் தாதுகோப வடிவில் சிகரம் காட்டப்பட்டுள்ளது.
- கடாலாதெனிய விகாரைக்கு முன்பாக பெரியவிலான சைத்தியத்துடன் “விஜாேயத்பாய” எனும் கட்டடப்பகுதி அமைக்கப்பட்டுள்ளது.
- இத்தூபியைச் சுற்றி 4 சிலை மனைகள் அமைக்கப்பட்டுள்ளன.
- கஜசிங்க கொரவக்கல், காவற்சிலை முதலிய பகுதிகளும் காணப்படுகிறது.
- தூணின் அடியில் சிங்க உருவங்கள் காணப்படுகின்றன.

Department of Examinations - Sri Lanka

**3.** ஐரோப்பிய நவீன கலைப் போக்குகளை அடிப்படையாகக் கொண்டு, இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் உருவான, இலங்கையின் ஓவிய, சிலைக் கலைஞர்களால் சகாப்த சாதனைகள் படைக்கப்பட்டுள்ளன.

(i) நவீன சிலைக் கலையின் கலைநுட்பங்களைப் பயன்படுத்தி திஸ்ஸ ரணசிங்கவினால் நிர்மாணிக்கப்பட்ட சிலைகள் **இரண்டின்** பெயர்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

- துஸ்கரகிரியாவ or கடினச்செயல்
- மகிஷாசுர சிலை or மகிஷமரணம்
- பாவ மன்னிப்பு or வினைப்பயன்
- கணேசர் or பிள்ளையார்
- தபசிசிலை
- அறிஞர்களின் முகங்கள்

(ii) ஓவியர் ஸ்டான்லி அபேசிங்கவின் ஓவியப்பாணி தொடர்பாக அவரது படைப்புகளை அடிப்படையாகக் கொண்டு சுருக்கமாக மதிப்பிடுக. (05 புள்ளிகள்)

- அவரின் நிர்மானிப்புகள் ஐரோப்பிய நவீன ஓவியக்கலைஞர்களான போல் செசான், ஹென்றி மத்தீஸ் போன்றோரின் கனவடிவவாத, வெளிப்பாட்டுவாத போவிச ஓவியப்பாணியிலும், சுதேச பாரம்பரிய பாணிகளையும் கொண்டதாக அமைந்துள்ளன.
- உதாரணம்

I **கடற்கன்னியின் நடனம்**

- ✔ இவ் ஓவியம் கண்டி கால சுதேசபாணியையும், ஐரோப்பிய நவீன கலைப்பண்பையும் ஒன்றிணைத்து வரையப்பட்டுள்ளது.
- ✔ பௌத்த இலக்கியத்தில் காணப்படும் புனைகதை இவ் ஓவியத்தில் காட்டப்பட்டுள்ளது.
- ✔ மோடிப்படுத்தப்பட்ட மனித உருக்கள் காட்டப்பட்டு வரையப்பட்டுள்ளது.
- ✔ முன்னணி, பின்னணி, ஆழம், முப்பரிமாணத் தன்மை இயற்கைக்கு சார்பாக காட்டப்படவில்லை.
- ✔ தூர தரிசனம் கொண்ட வெளி காட்டப்பட்டுள்ளது.

II **குழந்தைப்பருவமும் இளமைப்பருவமும்**

- ✔ வாழ்க்கையின் இரண்டு கட்டங்களில் காணப்படும் உணர்வுகள் வெளிக்காட்டப்பட்டுள்ளது.
- ✔ இரேகைப் பயன்பாட்டை விட வர்ணப்பயன்பாட்டின் மூலம் உருவங்களை வெளிப்படுத்தியுள்ளார்.
- ✔ வர்ணநுட்பம் வேகமாக தூரிகை வீச்சுக்கள் மூலம் பயன்படுத்தியுள்ளது.
- ✔ குறியீட்டுவாதப் பண்புகளுடன் எளிமையான உருவங்களையும் உணர்வுகளையும் காணமுடியும்.
- ✔ விபரம் அல்லது தகவல் தெளிவாக தெரியாதவாறு வர்ணம் பயன்படுத்தப்பட்டுள்ளது.

III **குயவனின் வேலைத்தளம்**

IV **கண்டிப் பெரஹறா**

Department of Examinations - Sri Lanka

(iii) 43 ஆம் குழுவின் முதன்மை ஓவியரான ஜவன் பீரிஸின் 'திரும்பி வருதல்', 'கல்கிஸ்ஸ' ஆகிய ஓவியங்களை அடிப்படையாகக் கொண்டு, அவரது படைப்புகளில் வெளிப்படும் மேற்கத்திய நவீன ஓவியப் போக்குகள் பற்றி ஆராய்க. (08 புள்ளிகள்)

**திரும்பி வருதல்**

- தனிவர்ணச் சாயல் (கபிலம்)
- உருவங்கள் உள்ளதை உள்ளவாறு காட்டாது அவரது விருப்பிற்கேற்ப பாணி சார்ந்த மாற்றத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.
- தீவிரமான அமைதித்தன்மை காணப்படுகிறது
- வெளிப்பாட்டுவாதப் பண்பு காட்டப்பட்டுள்ளது.
- சதுரக் கோட்டு வலையமைப்புமுறை காணப்படுகிறது.

**கல்கிசை**

- தனிவர்ணச் சாயல் (நீலம்)
- அரூபமாகவும் மற்றும் எளிமையான வடிவங்களாகவும் மாற்றியிருத்தல்.
- கனவடிவ வாதப்பண்பு காட்டல்
- உருவங்களில் கனதியான அசைவற்ற தன்மை காட்டப்படுதல்.
- பியற்மொன்றியனின் ஓவியக்கலை செல்வாக்கை காணக்கூடியதாக உள்ளது.
- சுதேச உருவங்கள் தொடர்பான உணர்வை முன்வைத்து வரையப்பட்டுள்ளது.

Department of Examinations - Sri Lanka

## பகுதி - ஆ
## (சித்திரக்கலையின் மதிப்பீடும் இரசனையும் - இந்தியா)

**4.** மௌரிய வம்சத்தைச் சேர்ந்த தர்மாசோக மன்னனின் ஆட்சிக்காலத்தில் தொடங்கிய பௌத்த கலை மரபு குப்தர் காலத்தின் இறுதி வரை நிலவியது.

(i) அசோகத் தூண்கள் **இரண்டின்** பெயர்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

- பதீராதூண்
- சாரா நாத் தூண்
- ராம்பூர்வா தூண்
- லெளரியா நந்தன்கர் தூண்
- ருமின்தாய் தூண்
- தில்லி மிரட் தூண்
- பபிர (வைசாலி) தூண்
- சங்களிஸ் தூண்
- திதிலி தோபுரா தூண்
- நிகக்லிவா தூண்

(ii) சாஞ்சி தூபியின் கட்டடக்கலைப் பண்புகள் தொடர்பாக சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)

- கி.பி 3 ஆம் நூற்றாண்டில் அஷோக மன்னன் காலத்தில் கட்டப்பட்டது.
- சாஞ்சி தூபியானது 56' உயரமும், 120' விட்டமும் கொண்டது.
- மேதிய நிலத்திலிருந்து 16' உயரம் கொண்டது.
- இரண்டு சுற்றுப்பிரகாரம் அமைக்கப்பட்டுள்ளது.
- இது நீர்க்குமிழி வடிவம் கொண்டது.
- சாஞ்சி தூபியின் அடிப்படை அங்கமான மேதிய எனும் அடித்தளம் மீது செங்கற்களால் அரைக்கோள வடிவில் (கர்ப்பய) அண்டமும், அதற்கு மேல் சதுரக்கல் வேலியான ஹர்மிகா உள்ளது. ஹர்மிகாவுக்கு மத்தியில் "யூப" எனும் யஸ்டிய எனும் கற்றூணும் உள்ளது. அதன் அடியிலிருந்து படிப்படியாக மேல்ப்பக்கமாக ஒடுங்கிச் செல்லும் விதத்தில் (சத்திரய) எனும் மூன்று குடை வடிவமும் அமைக்கப்பட்டுள்ளது.
- இதன் சுற்றி வரும் பகுதியில் கல்வேலி (மேடை) அமைக்கப்பட்டுள்ளது.
- தூபியின் நாற்றிசையும் கல்லால் ஆன 4 தோரணங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.
- வலம்வரும் மேடை 10' அகலம் கொண்டது.
- நான்கு தோரணங்களில் புத்தரின் சரிதைகளும், ஜாதகக் கதைகளும், விலங்குகளும் செதுக்கப்பட்டுள்ளன.
- வாயிற்தோரணம் அசோகன் காலத்தில் மரத்தாலும் "சாதவாகனா்" காலத்தில் கல்லாலும் ஆக்கப்பட்டுள்ளதென கூறப்படுகிறது.

Department of Examinations - Sri Lanka

(iii) "அஜந்தா சுவரோவியங்களில் தேரவாத, மகாயான மரபுகள் இரண்டிற்குமுரிய ஓவியங்கள் காணக்கிடைக்கின்றன." ஒப்பீட்டுரீதியில் ஆராய்க. (08 புள்ளிகள்)

- கி.மு 450 இற்கு முற்பட்ட காலத்தில் அனைத்தும் தேரவாத குகைகளாகவும் பின்னர் மகாயான குகைகளாகவும் அமைக்கப்பட்டது.

- அஜந்தா குகைகளில் 9, 10 ஆம் இலக்க குகைகள் தேராவாத பௌத்த மரபினையும் 1, 2, 16, 17 ஆம் குகைகள் மகாயான பௌத்த மரபுகளையும் கொண்டு ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன.

- குகை 9 – நாகராஜா, பக்தர் கூட்டம், தூபியை வழிபடும் காட்சி, இசைக்கருவி இசைக்கும் பெண்கள்.

- 10 ஆம் இலக்க குகையில் அரசன் பரிவாரங்களுடன் போதியை வழிபடும் காட்சிகளும், ஜத்தந்த ஜாதகக் கதைகள், சாம, ஜாதக் கதைகள் என்பன வரையப்பட்டுள்ளன.

- சாம ஜாதகக் கதையில் "பர்னஸ்" அரசனின் தலைப்பாகை காணப்படுகிறது அத்துடன் அரசனின் அரசமர வழிபாட்டுக் காட்சியும் காட்டப்பட்டுள்ளது.

- மேலும் தேராவாத குகைகளில் அரச கொலு மண்டபக் காட்சிகள், இசைக்கருவி இசைக்கும் பெண்கள், சாம ஜாதகம் போன்ற ஓவியங்களும் வரையப்பட்டுள்ளன.

- குகை 1 இல் காணப்படும் பத்மபாணி போதிசத்துவரின் உருவமானது ஏனைய உருவங்களை விட பெரியதாகவும் தலையில் மகுடத்துடன் கருணைமிகு பாவமும் துயரத்தின் சாயலும் காட்டி வரையப்பட்டுள்ளது.

- அவலோகிதேஸ்வர போதிசத்துவரின் உருவம் காணப்படுகிறது.

- புத்தர் பிரான் கிம்புள்வத்புரத்திற்கு வருகை தரல் – இதில் புத்தரை 12' உயரத்தில் காட்டப்பட்டுள்ளது. ஒளிவட்டத்துடன் தெய்வ உரு குடை பிடிப்பதாக காட்டப்பட்டுள்ளது. இதில் புத்தரின் மேன்மை, பெருங்கருணை, ஆன்மீகப் பண்பு காட்டப்பட்டுள்ளது.

- போதி சத்துவர் துசித்த தேவலோகத்திலிருந்து மகாமாயா தேவியின் கருவில் தரிப்பதற்கு மண்ணுலகிற்கு வருதல் சங்கிரசபுரத்தில் தரும போதனை செய்தல், சிங்களாவதானய போன்ற ஓவியங்களும் மகாயானப் பண்புகளை வெளிப்படுத்துகிறது.

- அவை தவிர மரணிக்கும் குமாரி, வெஸ்ஸந்தர ஜாதகம், இந்திரனும் பரிவாரங்களும், குரங்குக் கூட்டமும் மான் கூட்டமும், மாத்து போசக ஜாதகம், சங்கிஸ்ஸ புரத்தில் தர்ம போதனை போன்ற ஓவியங்களும் குறிப்பிடப்படுகின்றன.

Department of Examinations - Sri Lanka

**5.** இந்திய பௌத்த கலை மரபுகளில் சிலை நிர்மாணிப்புகளில் பல்வேறு வேறுபாடுகளைக் காணத்தக்கதாயுள்ளது.

(i) காந்தாரக் கலை மரபுக்கமைய நிர்மாணிக்கப்பட்ட **இரண்டு** சிலைகளின் பெயர்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

- பிரேகம் புத்தர் சிலை
- தக்னீ பஹீ புத்தர் சிலை
- சகரீ பஃலூல் புத்தர் சிலை
- துஸ்கர கிரியாவ புத்தர் சிலை

(ii) மதுரா மரபுக்குரிய கத்ரா புத்தர் சிலை பற்றி சுருக்கமாக அறிமுகம் செய்க. (05 புள்ளிகள்)

- கி. பி 1 ஆம் நூண்றாண்டுக்கரிய சிலையாகும்
- சிக்ரீ எனும் பகுதியிலிருந்து கொண்டு வரப்பட்ட ஒருவகை செந்நிறக்கல்லில் இச்சிலை அமைக்கப்பட்டுள்ளது.
- இது மூன்று சிங்க உருவங்களுடனான ஆசனத்தில் புத்தர்பிரான் அமர்ந்திருப்பதை வெளிக்காட்டுகிறது.
- வலக்கை அபய முத்திரையில், பத்மாசன பீடத்தில் அமர்ந்தவாறு செதுக்கப்பட்டுள்ளது.
- இடக்கை இடப்பாதத்தின் மீது நேராக வைத்து காட்டப்பட்டுள்ளது.
- முகம் கருணையுடனும் புன்னகையுடனும் செதுக்கப்பட்டுள்ளது.
- ஆடை உடலோடு ஒட்டியவாறு ஒரு வரிக் கோட்டில் காட்டப்பட்டுள்ளது
- தலையைச் சுற்றி எனிமையான ஒளிவட்டத்துடன், இரு புறத்தில் பிரம்மா, இந்திரன் என்பவர்களைக் குறிக்கும் உருவங்கள் காணப்படுகின்றது.
- பின்னனியில் அரச மரமும், மேற்புறத்தில் தெய்வ உருவங்ள் இரண்டும் செதுக்கப்பட்டுள்ளது.
- தலையில் உஷ்னிச சிறிய குடுமி காணப்படுகிறது.

Department of Examinations - Sri Lanka

(iii) குப்தர் காலத்துக்குரிய மதுரா புத்தர் சிலையிலும் சாராணாத் புத்தர் சிலையிலும் காணத்தக்க கலைப் பண்புகளை ஒப்பீட்டுரீதியில் பகுப்பாய்க. (08 புள்ளிகள்)

- குப்தர் கலை மரபின் புத்தர் சிலைகளை நிர்மாணிக்க மதுரா, சாரநாத் உனும் பிரதான மத்திய நிலையங்கள் உதவின.
- ஆழமான உணர்ச்சி காட்டி செதுக்குதல்.
- வெளிநாட்டுப் பண்புகளில் இருந்து விலகி உள்நாட்டுப் பண்புகளை வெளிப்படுத்தி செதுக்கப்பட்டுள்ளது.
- இளமைத் தோற்றத்தில் புத்தர் சிலைகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.
- காவியுடை உடலோடு ஒட்டியபடி, காவியுடையினூடாக உடலின் அங்கங்களை காட்டி செதுக்குதல்.

| மதுரா புத்தர் சிலை | சாராநாத் புத்தர் சிலை |
|---|---|
| • மதுரா பிரதேசத்தில் கண்டெடுக்கப்பட்ட குப்த சிலையாகும் | • சாராநாத் கலைக்கூடத்தில் உருவான இந்திய புத்தர் சிலைகளுள் மேன்மையான சிலையாகும். |
| • இடக்கை கீழே தொங்கவிடப்பட்டு, வலக்கை முன்னோக்கி முழங்கை வரை மடிக்கப்பட்டுள்ளது | • தர்ம சக்கர முத்திரையை காட்டியபடி பத்மாசன பீடத்தில் அமர்ந்து காட்டப்பட்டுள்ளது.<br>• மான்களின் பூங்காவில் (இசிபத்தன மிகதாயில்) புத்தர் ஐந்து துறவிகளுக்கு முதல் தர்ம போதனை செய்வதை குறிக்கின்றது. |
| • அழகான கவர்ச்சியான கட்டழகான தேக இலட்சணங்களை பிரதிபலிக்கிறது. | • புத்தரின் சாந்தி, கருணை, ஆளுமை எனும் இயல்புகளை கொண்டுள்ளது. |
| | • சூனார் எனும் கல்லில் அமைக்கப்பட்டது. |
| • இரு தோள்களும் மூடியிருக்கும் விதத்தில் உடலோடு ஒட்டியபடி காணும் காவியுடை மடிப்புடன் சந்தத்துடன் காட்டப்பட்டுள்ளது. | • இரு தோள்களும் மூடியிருக்கும் விதத்தில் உடலோடு ஒட்டியபடி காணும் காவியுடை மடிப்பு சந்தத்துடன் காட்டப்பட்டுள்ளது.<br>• காவியுடையின் ஊடாக உடலின் அமைப்பு ஊடுருவித் தெரியும் போதிலும், தசைகளின் அமைப்பு தோன்றாத விதத்தில் கட்டழகுடன் எளிமையாக செதுக்கப்பட்டுள்ளது. |
| • முழுமை கொண்ட உடலின் வடிவம் வெளிப்படுத்தி செதுக்கப்பட்டுள்ளது. | • ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமங்களின் படி இச்சிலை நிர்மாணிக்கப்பட்டுள்ளது. |
| • தாமரை இதழ்கள், கொடிவலை ஆகியவை கொண்ட மிகவும் அழகிய நுட்பமான செதுக்கல் வேலைப்பாடுகளைக் கொண்ட ஒளிவட்டம் காட்டப்பட்டுள்ளது. | • மிக நுட்பமான கொடிவலை அலங்காரமுடைய செதுக்கல் வேலைப்பாடுகளைக் கொண்ட ஒளிவட்டம் காட்டப்பட்டுள்ளது. |
| | • இரு புறத்தில் தெய்வ உருவங்களுள் இரண்டும் ஆசன த்தின் அடியில் முன்பக்க நடுப்பகுதியில் தர்மச் சக்கரமும் காட்டப்பட்டுள்ளது.<br>• இரு புறத்தில் வணங்கும் நிலையில் துறவிகளின் உருவங்கள் காட்டப்பட்டுள்ளது.<br>• மான்களின் பூங்கா என்பதைக் காட்ட அமர்ந்த நிலையில் இரு மான்கள் காட்டப்பட்டுள்ளது. |

Department of Examinations - Sri Lanka

## பகுதி - இ
## (சித்திரக்கலையின் மதிப்பீடும் இரசனையும் - ஐரோப்பா)

**6.** 'அதியதார்த்தவாதம்' (surrealism) என்பது இருபதாம் நூற்றாண்டின் ஓவியக் கலையை புதியதோர் பாதைக்கு இட்டுச் சென்ற கலைப்போக்காகும்.

(i) அதியதார்த்தவாத ஓவியக் கலைஞர்கள் இருவரின் பெயர்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

- சல்வடோர் டாலி
- ஜோன் மீரோ
- ப்ரீடா கலோ
- மக்ஸ் ஏர்ன்ஸ்ட்
- றினி மார்கிரிட்
- ஹான்ஸ் ஆரப்

(ii) அதியதார்த்தவாதக் கலையின் அடிப்படைப் பண்புகளைச் சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)

- கி. பி 20 ஆம் நூற்றாண்டில் ஆரம்பப் பகுதியில் உருவான முக்கியமான கலையாகும்
- முதலாம் உலகப் போருக்குப் பின் ஏற்பட்ட கசப்பான அனுபவங்களே இவர்களது ஓவியங்களுக்கு அடித்தளமாக அமைந்தது.
- சிக்மன் பிரெய்ட் அவர்களின் உளப்பகுப்பாய்வுக் கோட்பாடுகளான நனவிலி நிலை, அடிமனதின் உணர்வுகள், கனவு எனும் காரணிகளுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டது.
- முரண்பாடான தன்மை, எழுமாற்று மற்றும் தன்னியக்க செயற்பாடுகள் என்பன அதியதார்த்தவாத கலையின் முக்கிய பண்புகளாகும்.
- இயல்பு நிலைக்கு அப்பாற்பட்ட, இயற்கைக்கு மாறான கற்பனைத் திறன் கொண்ட புதிரான உருவங்களைக் காணலாம்.
- ஆக்கங்களை உருவாக்கும் போது வெளிப்புற உலகை விட மனதை ஆக்கிரமிக்கும் மனோபாவத்தின் முக்கியத்துவத்தை திடமாக நம்பினர்.
- விநோதத் தன்மை, உருவத்தெளிவு, பௌதீகம் சார்ந்த தன்மை காட்டுதல்.

(iii) அதியதார்த்தவாதமானது யதார்த்தவாதக் கலையிலிருந்தும் அரூபவாதக் கலையிலிருந்தும் வேறுபடும் விதத்தை 'இறவாத ஞாபகம்' என்ற ஓவியத்தை அடிப்படையாகக் கொண்டு ஆராய்க. (08 புள்ளிகள்)

- சல்வடோர் டாலியின் சிறந்த ஓவியமாக "இறவாத ஞாபகம்" ஓவியம் குறிப்பிடப்பட்டுள்ளது.
- நீடித்த நினைவு அல்லது இறைவாத ஞாபகம் எனும் ஓவியத்தில் உள்ளதை உள்ளவாறு காட்டும் தன்மை உருவங்களை மறைத்து காட்டும் தன்மை இல்லாது வினோதமான குறியீட்டு வடிவில் உருவங்கள் வரையப்பட்டுள்ளன.
- இயற்கை அல்லது அதில் அடங்கும் பொருட்கள் அதே விதமாக காண்பிக்கப்படாது உருவங்களை எளிமையாக்கி கருப்பொருளும் உருவங்களும் மறைந்த தன்மையில் வைளிப்படுத்தும் கலைப்பாணியாக அரூப வாதம் காணப்படுகின்றது.

Department of Examinations - Sri Lanka

- யதார்த்தவாதம், அரூபவாதம் ஆகிய இரண்டு கலைப்பாணிகளும் மாறுபட்ட தன்மையில் அதியதார்த்தவாதம் காணப்படுகிறது. அதாவது இயல்பு நிலைக்கு அப்பாற்பட்ட இயற்கைக்கு மாறான அதியுயர் கற்பனைத்திறன் கொண்ட புதிரான உருவங்களை வெளிப்படுத்துவதாகக் காணப்படுகிறது.

- ஞானத்திற்கும் தர்க்கத்திற்கும் அப்பாற்பட்ட கற்பனையின் முன்னுரிமை அடிப்படையில் தோற்றம் பெறும் ஒரு கலைப்போக்காக அதியதார்த்தவாதம் காணப்படுகிறது.

- உருகிய நிலையிலுள்ள கடிகாரங்களும், எறும்புகளும் குறியீட்டு உருக்களாக காட்டப்பட்டுள்ளது.

- ஓவியத்தின் மத்தியில் நீளமான மூக்குடன் தலையொன்று காட்டப்பட்டுள்ளது.

- இது உறக்கத்தில் கனவுகாணும் ஒருவரை நினைவுபடுத்துகிறது.

- இதில் தலையை நுணுக்கமாக நோக்கினால் அதன் உறுப்புக்கள் பலவித பூச்சிகளின் அங்கங்களுக்கு ஒத்ததாக வரையப்பட்டுள்ளது.

- மயிர்க்கொட்டியின் நீண்ட உரோமங்கள் உடையதாக புருவங்கள் வரையப்பட்டுள்ளது.

- மூக்கினுள் நத்தையின் வடிவம் ஒன்று தென்படுகிறது.

- இதில் ஒன்றுடன் ஒன்று தொடர்பற்ற வகையில் கடிகாரங்களையும் ஏனைய உருவங்களையும் எதிர்பாராத விதத்தில் அருகருகில் வைத்திருப்பது இவ் ஓவியத்தின் விஷேட உத்தியாகும்.

- இவ் ஓவியம் காலம், இடப்பரப்பு, சுபாவம் எனும் மூன்று காரணிகளுக்கு இடையிலான தொடர்பை வெளிக்காட்டுவதாக காணப்படுகிறது.

Department of Examinations - Sri Lanka

**7.** புராதன காலத்தில் பலம் வாய்ந்ததோர் இராச்சியமாக விளங்கிய எகிப்தின் கலைப் படைப்புகளில் அவர்களுக்கேயுரிய தனித்துவமான மரபுரீதியான பண்புகள் பரவலாகக் காணக்கிடைத்தன.

(i) மரபுரீதியான பண்புகளைக் கொண்ட எகிப்திய சிலைகள் **இரண்டின்** பெயர்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

- ஸ்கிரைப் (எழுது வினைஞர்)
- கப்ரே
- ராம்செஸ் மன்னன் சிலை
- மென்குரேயும் அவனது மனைவியும்
- ரெகோரப் அரசனும் நெபெட் அரசியும்

(ii) எகிப்திய சிலைகளில் காணத்தக்க மரபுரீதியான பண்புகளைச் சுருக்கமாக விளக்குக.(05 புள்ளிகள்)

- எகிப்திய சிற்பங்கள் நின்ற நிலையிலும், இருந்த நிலையிலும் காணப்படுகிறது
- தனித்தும் சோடியாகவும் செதுக்கப்பட்டுள்ளது.
- விறைப்புத் தன்மை கொண்டவையாக உள்ளன.
- உருவங்களில் அசைவுநிலை, லயம் என்பன காணப்படுவதில்லை
- கண்கள் பார்வையாளரை நேராகப் பார்ப்பது போன்று விழித்தவாறு காணப்படுதல்
- நின்றநிலை சிலைகளில் கால்கள் முன், பின்னாக வைத்தபடி காட்டுதல். கைகள் தொங்கவிடப்பட்டு உடலோடு ஒட்டியவாறு விரல்கள் இறுக்கியவாறு காட்டுதல்
- இருந்த நிலையில் சிலைகளில் கால்கள் ஒன்று சேர்த்தவாறும் கைகள் தொடையில் வைத்தபடியும் காட்டுதல்.
- உருவங்களில் சமச்சீர் பண்புகள் காணப்படுதல்
- பெண் உருவங்கள் உடலுடன் ஒட்டிய முழுமையான ஆடையுடனும், ஆண் உருவங்கள் உடலின் கீழ்ப்பகுதியை மாத்திரம் மறைக்கும் ஆடையுடன் காணப்படுதல்.
- உணர்வுகள் அற்ற முகத்துடன் காணப்படுதல்.
- ஆபரணங்களோ, அழகுபடுத்தல்களோ காணப்படமாட்டாது.
- உடல்கள் லயமான, உயிரோட்டமான தன்மையற்று காணப்படுதல்.
- இயற்கைத் தன்மையும், மோடிப்படுத்தப்பட்ட தன்மையும் காணப்படுதல்.
- மிகச் சிறிய சிற்பங்களும், அதே நேரம் மிகப் பெரிய சிற்பங்களாகவும் காணப்படுதல்.
- முழுப்புடைப்பு, குறைப்புடைப்பு நுட்பமுறைகள் பயன்படுத்தப்பட்டிருக்கும்.
- கேத்திர கணித வடிவங்களை உடல் நிலைகளில் காட்டுதல்.
- சுண்ணாம்புக்கல், மரம், மணற்கல் (உருமாறியபாறை) போன்ற ஊடகங்களில் சிலைகளை அமைத்தல்.

Department of Examinations - Sri Lanka

(iii) மரபுரீதியான எகிப்திய ஓவியக்கலைப் பண்புகளுக்கமைய 'நடனமாதுக்களும் இசைக்கலைஞர்களும்' என்ற ஓவியம் மிகச்சிறப்பானதோர் நிர்மாணிப்பாகும் என்பதனை 'பறவை வேட்டை' என்ற ஓவியத்துடன் ஒப்பிட்டு விளக்குக. (08 புள்ளிகள்)

**பறவை வேட்டை**

- ஓடமொன்றில் அரச குடும்பம் ஒன்று காட்டப்பட்டுள்ளது. இதில் அரசன் பறவைகளை "பூமராங்" ஆயுதத்தை கையில் வைத்தபடி பறவைகளை வேட்டையாடுதல் வெளிக்காட்டப்பட்டுள்ளது.
- இதில் பறவைகளும், மீன், விலங்குருவங்களும் இயற்கைத்தன்மையில் வரையப்பட்டுள்ளது.
- மனித உருக்களில் விறைப்புத்தன்மை காட்டப்பட்டுள்ளது.
- மனித உருவங்கள் பக்கப்பாட்டில் வரையப்பட்டுள்ளன. (மார்பு பகுதிகள் நேராகவும் கைகால்கள், தலை பக்கப்பாடாகவும் உள்ளன)

**நடன மாதர்களும், இசைக்கலைஞர்களும்**

- நடன மாதர்களும் இசைக்கலைஞர்களும் விருந்தினர்களின் முன்னிலையில் கலை நிகழ்ச்சியில் ஈடுபடும் காட்சியை வெளிக்காட்டுகிறது.
- இவ் உருவங்கள் ஒரு பக்கம் திரும்பியவாறு இல்லாது சற்று திரும்பியவாறு வரையப்பட்டுள்ளது.
- விறைப்புத் தன்மைக்குப் பதிலாக நெகிழ்ச்சியான தன்மை காட்டி வரையப்பட்டுள்ளது.
- குழல் ஊதும் உருவங்கள் முற்று முழுதாக முன்னோக்கியவாறும் கூட இருக்கும் உருவம் சற்றுத்திரும்பியவாறும் வரையப்பட்டுள்ளது.
- நடனமாடும் பெண்கள் மிக நெகிழ்வாகவும், சந்தத்துக்கு ஏற்ற வகையிலும் காட்டப்பட்டுள்ளனர்.
- ஆடைகளின்றி ஆபரணங்களுடன் சித்தரிக்கப்பட்டுள்ளனர்.
- இவ் இரண்டு ஓவியங்களும் "தீப்ஸ்" நெபாமுன் கல்லறையில் வரையப்பட்டுள்ளது.

Department of Examinations - Sri Lanka